# தமிழரசு ஆண்டு மாநாட்டில் சத்தியாக்கிரக படக்காட்சி

Registered as a News pape in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்: 42

தபால்பெட்டி எண்: 49
போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 11 முஹறம் 5 திங்கட்கிழமை [24-3-69

முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தின் பெயரைச் சொல்லி வரும் எவருக்கும் நன்கொடைகள் எதுவும் கொடுக்கவேண்டாம் என்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

விற்பனையாகிறது
திரைவாணி
6-வது இதழ்- விலை சதம்-1.25
பிரபல நடிகைகளின்
★ 8 பெரிய அளவு வர்ணப் படங்கள்
★ 6 பெரிய அளவு புகைப்படங்கள்
அத்துடன் சௌகார் ஜானகி, ஜெமினி கீதாஞ்சலி-நாகேஷ் எழுதும்கட்டுரைகள்
★ அண்ணாவுடன் சிவாஜி
★ மக்கள் திலகத்தைப்பற்றி மக்கள்
இன்னும் ஏராளமான செய்திகளைக் கொண்ட
சினிமா இதழ்
அட்டைப்படம்: சிவாஜி-சௌகார்ஜானகி
தமிழ்ப்பண்ணை புத்தக நிலையம்
193, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.
கிளை: 19, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், திங்.

அடுத்தமாதம் 7-ம், 8-ம், 9-ம் திகதிகளில் உறிவிலில் நடக்கவிருக்கும் தமிழரசுக் கட்சியின் 11-வது வருடாந்த மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் இப்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன, விழாவுக்கான ஏற்பாடுகளை உடுவில் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கததைத் தலைவராகக்கொண்ட வரவேற்புக் குழு கவனித்துவருகின்றது.

முதலாம்நாள் விழாவில் விடய ஆலோசனைக்கூட்டம், கண்காட்சி திறப்புவிழா, கலைநிகழ்ச்சிகளும், இரண்டாம்நாள் விழாவில் தொழிலாளர் மகாநாடு, விவசாயிகள் மகாநாடு, மாதர் மகாநாடு, இலக்கிய மகாநாடு கவியரங்கு ஆகியனவும் நடைபெறும்,

இறுதி நாளான 9-ந் திகதி உடுவிலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, யாழ்ப்பாணம் வந்தடைந்து இரவு கோட்டை மைதானத்தில் பகிரங்கக் கூட்டம் நடாத்தப்படும். இம்மாநாட்டிலேயே கட்சியின் புதியதலைவரான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பதவியைப் பொறுப்பேற்பார்.

விழாவுக்கென உடுவில் கிராமசபை திறந்தவெளியரங்கில் சுமார் 130 அடி நீளமான மாநாட்டுப் பந்தலொன்று இப்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

இணுவில் சந்தையில் 75 கைத்தொழில், வர்த்தக, கமத்தொழில் ஸ்தாபனங்களும், கமக்காரர்களும் கலந்துகொள்ளும் கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சி நடாத்தப்படும்.

தமிழரசுக்கட்சியின் முழு வரலாற்றையும் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களின் கண்காட்சி, சத்தியாக்கிரகக் காட்சிகளை விளக்கும் இலவச படக்காட்சி ஆகியனவும் விழாவில் முக்கியமாக இடம் பெறும்.

மகாநாட்டை முன்னிட்டு மூவர்ண அட்டைகொண்ட 'மாநாட்டு மலர்'' ஒன்றும் விழாவில் வெளியிட்டு வைக்கப்படும்.

தமிழரசுக்கட்சியின் முழு வரலாற்றையும் விளக்கக் கூடிய வகையில் வாலிபமுன்னணியால் தயாரிக்கப்பட்ட நாடகம் ஒன்றும் விழாவில் மேடையேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

(க.ா நி.)

# நாவலர், ஞானப்பிரகாசர் சிலை யாழ். நூல்நிலைய முன்றலில்

## யாழ். ஆஸ்பத்திரியில் இரத்தம் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்திங்கள்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் மீண்டும்இரத்தத்திற்குப் பெரும் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனல் பொதுமக்களிடம் இரத்தம் கோரிவரவிருக்கிறுர்கள் ஆஸ்பத்திரி அதிகாரிகள்.

அவசர சத்திர சிகிச்சைகள், விபத்து நோயாளர்கள் போன்றவர்களுக்கே உடனுக்குடன் வழங்குவதற்குஇரத்தம் இல்லாதகஷ்டநிலை ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூகநிலையங்கள், கிராமசபைகள், கிராமமுன்னேற்றசங்கங்கள் பாடசாலைகள் ஆகியன இரத்ததானம் செய்ய விரும்பினல் தமக்கு அறிவிக்கும்படியும், இரத்தம் சேகரிக்கும்வாகனத்தை அங்கேயே அனுப்பி இரத்தம் சேகரிக்க முடியும் என்றும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வைத்தியசுப்பிரிண்டன் டாக்டர் ரி. சண்முகநாதன் அறிவித்துள்ளார். (சா நி)

## மீனவர் கரைசேர்ந்தனர்

காங்கேசன்துறை, ஞாயிறு

மயிலிட்டியிலிருந்து காணமற்போன மீன்பிடிப் படகும் அதில் சென்றிருந்த மூவரும் கடந்த இரவு கரை சேர்ந்தனர்.

என்ஜின் டீசல் முடிந்துவிட்டதால்அவர்கள்திரும்பி வரமுடியாத நிலை ஏற்பட்டதாகவும் இந்தியக் கரையை நோக்கி அடைந்து கொண்டிருந்த படகை இங்கிருந்து அவர்களை தேடிச் சென்ற படகுகள் கரை சேர்ப்பித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 27-ம் திகதி மாநகரசபை கூட்டத்துக்கு 27 பிரேரணைகள் வருகின்றன

யாழ்ப்பாணம், திங்கள்

ஆறுமுகநாவலருக்கு யாழ்ப்பாணம் பொதுநூல் நிலையமுன்றலில் சிலைநிறுவ வேண்டும் என்று கோரும் தீர்மானமொன்று இம்மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ்ப்பாண மாநகர சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் கொண்டு வரவிருக்கும் அப்பிரேரணையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழுக்கும் சமயத்திற்கும் அயராதுதொண்டாற்றி உலகமெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களின் மனதில் அழியாத இடத்தைப் பெற்றுள்ள யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ அறுமுக நாவலருக்கு யாழ்ப்பாண நகரத்தில் சிலை அமைக்கப்படவேண்டுமென்று பல வருடங்களுக்கு முன்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தபோதும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த விஷயத்தையிட்டுக் காலம் தாழ்த்தாது உடனடியாக ஆறுமுக நாவலருக்குச் சிலை அமைக்க வேண்டுமெனவும், இதனைப் பொதுஜன நூல் நிலைய முன்றலில் ஒரு பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டுமெனவும் இச்சபை தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில் திரு. அ. நடராசா கீழ்க்கண்ட பிரேரணையைக் கொண்டுவருவார். மறைந்த ஞானப்பிரகாச சுவாமிகளுக்கும் பொதுசன நூல்நிலையத்தின் முன்பாக சிலை அமைக்கவேண்டும் என இச்சபை தீர்மானிக்கிறது.

''யாழ்ப்பாண மாநகர சபையின் பெயரை மாற்ற வேண்டும்.''

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட பிரேரணை ஒன்றையும் கொண்டுவரவிருக்கிறார். அரியாலை கிழக்கு அங்கத்தவரான திரு. கே. எஸ். நடராஜா.

அவரது பிரேரணை பின்வருமாறு:

''யாழ்ப்பாண மாநகர சபை'' என்ற பெயரை யாழ். மாநகராட்சிமன்றம்'' என உடனடியாக மாற்றுவதோடு, அதே பிரகாரம் சகல அடையாளப் பலகைகளையும், லொறிகளிலுள்ள பெயர்களையும் அப்படியே மாற்றவும் வேண்டும்.

## மீண்டும் நடைபவனி

கல்முனை, ஞாயிறு

அடுத்தமாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் மாநில மகாநாட்டிற்குச் செல்வதற்கான நடவடிக்கைகள் இங்குள்ள கிளைச் சங்கங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கல்குடா தொகுதியிலிருந்து திரு. பொ. மாணிக்கவாசகர் தலைமையிலும் மட்டக்கிளப்பிலிருந்து திரு. செ. இராசதுரையின் தலைமையிலும் களுவாஞ்சிக்குடியிலிருந்து கட்சித் தலைவர் திரு எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையிலும் தொண்டர்கள் மகாநாட்டுக்குச் செல்லவிருக்கின்றனர். கல்முனையிலிருந்து ஜனுப் மசூர் மௌலானு செல்லமுடியாத சந்தர்ப்பம் இருந்தால் திரு. கந்தையா தலைமையில் தொண்டர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வராம்.

திருமலை மகாநாட்டுக்கு பாதயாத்திரை செய்தது போல் யாழ்ப்பாண மகாநாட்டுக்கும் நடைபவனி ஒன்றைக் கல்முனையிலிருந்து நடாத்த களுவாஞ்சிக்குடி தமிழரசுக் கட்சிகிளை ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. கல்முனையில் ஆரம்பித்து களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, வாழைச்சேனை மூதூர், தோப்பூர் திருமலை ஊடாக முல்லைத்தீவு வரை சென்று அங்கிருந்து பஸ்சில் யாழ்ப்பாணம் செல்வது பற்றி மேற்படி கிளைச் சங்கம் ஆலோசித்து வருகிறதாம்.

கப்பல் துறையில்

## இந்தியா இலங்கைக்கு உதவும் ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்கும், இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குமிடையிலான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகவிருக்கிறது. இந்தத் துறையில் இந்தியா இலங்கைக்கு பிள்ளைக்கும், இந்திய கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் ஸ்ரீ வஸ்த்தாவுக்குமிடையில் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது.

இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கைச்சாத்தாகும்

அல்வாய்

## வீரபத்திர ஆலயத்தில் இன்று ஆலயபிரவேசமுயற்சி

உடுப்பிட்டி, திங்கள், அல்வாய் வீரபத்திரர்

தற்கொலை செய்தவரின்

## சடலத்தை ஏற்றி வந்த வான் விபத்தில் சிக்கியது

### ஒருவர் உயிருக்காக போராடுகிறார்

யாழ்ப்பாணம் திங்.

சடலத்தை ஏற்றிக் ... லிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய்

## வீரபத்திர ஆலயத்தில் இன்று ஆலயபிரவேசமுயற்சி

உடுப்பிட்டி, திங்கள்

அல்வாய் வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகவிருக்கிறது. புரட்சிவாத சமசமாஜ வாலிப முன்னணியைச் சேர்ந்தவர்கள் இங்கு இன்று ஆலயப்பிரவேசம் செய்யப்போவதாக அறிவித்துள்ளனர். ஆலயப் பிரவேச முயற்சிகள் நடைபெற்ருல், ஆலய வருடாந்த உற்சவத்தை நிறுத்தி, கோயில் கதவுகளை மூடிவைப்பதெனக் கோயில் நிர்வாகிகள் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி அடிபடுகிறது.

சென்ற வாரம், புரட்சிவாத சமசமாஜ முன்னணியினர் அல்வாய் வீரபத்திரர் கோவில் தர்மகர்த்தாவான திரு. பாலசுப்பிரமணியத்துக்கு ஆலயப்பிரவேசம் செய்யப்போவதாக மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அவர் இது பற்றி ஆராய்ந்ததாகவும், எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

அல்வாய் வீரபத்திரர் ஆலயத்தில் நடைபெறும் ஆலயப்பிரவேச முயற்சியில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் கலந்துகொள்ளப்போவதில்லையென அறிவித்துள்ளது

''புரட்சிமூலம் எதனையும் சாதித்துவிடலாமென நினைப்பது மடமைத்தனம். காந்திய வழியைப் பின்பற்றி நடப்போமேயானல், பெரும்பான்மை-சிறுபான்மை மக்களிடையே சகோதரத்துவம் ஏற்படமுடியும்'' என்று உடுப்பிட்டி தமிழ் மன்றத் தலைவர் டாக்டர் அ. திருச்சிற்றம்பலம் இதே ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினர்.

எவ்வித எதிர்ப்புக்கள் வந்தாலும் அவற்றைச் சமாளிப்போமென்றும், நிச்சயம் ஆலயப்பிரவேசம் நடந்தே தீருமென்றும் புரட்சிவாத விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்கும், இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குமிடையிலான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகவிருக்கிறது. இந்தத் துறையில் இந்தியா இலங்கைக்கு முதல்தடவையாக உதவுகிறது.

சமீபத்தில் இந்திய வர்த்தக அமைச்சர் திரு. தினேஷ் சிங் இலங்கைக்கு விஜயஞ் செய்ததைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கை சாத்தாகவிருக்கிறது.

சென்ற வாரம் இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளைக்கும், இந்திய கப்பல் கூட்டுத்தாபனத் தலைவர் ஸ்ரீ வஸ்தாவுக்குமிடையில் இதுசம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்தது.

இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கைச்சாத்தாகும் ஒப்பந்தத்தின்படி இலங்கைசகு அனுப்பப்பட்டு இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பயிற்சியளிப்பர். இலங்கையிலுள்ளவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படுவர்.

அநேகமாக இந்தியாவில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகுமெனத் தெரிகிறது.

நாவலருக்குச் சிலை அமைக்க வேண்டுமெனவும், இதனைப் பொது ஜன நூல்நிலைய முன்றலில் ஒரு பொருத்தமான இடத்தில் அமைக்க வேண்டுமெனவும் இச்சபை தீர்மானிக்கிறது.

இக்கூட்டத்தில் திரு. அ. நடராசா கீழ்க்கண்ட பிரேரணையைக் கொண்டுவரவிருக்கிருர்.

சைவமும், தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டவரும், ஐந்தாவது குரவர் எனப் போற்றப்படுபவருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கும், கத்தோலிக்க மக்களின் பெருமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும். சிறந்த அறிஞர்

என உடனடியாக மாற்றுவதோடு, அதே பிரகாரம் சகல அடையாளப் பலகைகளையும், லொறிகளிலுள்ள பெயர்களையும் அப்படியே மாற்றவும் வேண்டும்.

## 4 வருடத்தில் 77 கோடி கடன்

கொழும்பு, ஞாயிறு

நான்கு வருடங்களில் இலங்கை வெளிநாடுகளிலிருந்து 76 கோடி 72 லட்சத்து 22 ஆயிரத்து 159 ரூபாய் 56 சதத்தைக் கடனுகப் பெற்றுள்ளதாம். 1965-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 1969-ம் ஆண்டு ஜனவரி வரை இந்தத் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொகையில் 15 கோடி 59 லட்சத்து 82 ஆயிரத்து 617 ரூபாயை இலங்கை திருப்பிக் கொடுத்துள்ளதாம்.

## சடலத்தை ஏற்றி வந்த வான் விபத்தில் சிக்கியது

### ஒருவர் உயிருக்காக போராடுகிருர்

யாழ்ப்பாணம் திங்.

சடலத்தை ஏற்றிக் கொண்டு வந்த வான் ஒன்று விபத்துக்குள்ளானது. இதனுல் சடலத்துடன் வந்தவர் படுகாயத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிருர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு மீசாலைக்கு அண்மையில் நடைபெற்றது. குருநாகலிலிருந்து சடலம் ஒன்றை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் வருகையிலேயே இவ்விபத்து நடைபெற்றதாக பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகலில் மாவட்ட நீதிபதி ஒருவரின் வீட்டில் தற்கொலை செய்த ஒருவருடைய சடலத்தை ஏற்றிக் கொண்டு வருகையிலேயே இவ்விபத்து நடைபெற்றதாக விசாரணையில் தெரிய வந்தது.

படுகாயத்துக்குள்ளான சுன்னுகத்தைச் சேர்ந்த வாமதேவா (36 வயது) என்பவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விசாரணை நடைபெறுகின்றது. (கா. நி)

## மட்டுவிலில் இன்று இரண்டாவது ஆலயப்பிரவேச முயற்சி

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இன்று காலை நடைபெறவிருக்கும ஆலயப்பிரவேச இயக்கத்தில் ஆயிரம் பேர் கலந்து கொள்வார்களென்றும். இவர்களில் அதிகமானேர் பெண்களாக இருப்பார்களென்றும், சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தெரிவித்தார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் ஊர்வலமாக கோவிலுக்குச் செல்வார்களென்றும், ஊர்வலத்தின் முன்னணிலையில் பெண்கள் செல்வார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அல்வாய் வீரபத்திரன் கோவிலிலும் இன்று காலை ஆலயப் பிரவேசம்செய்ய புரட்சிகர சமசமாஜ கட்சியின் ஆதிக்கத்திலுள்ள புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த் 200 பேர் செல்வார்களென்று புரட்சிகரவிடுதலை முன்னணியைச் சேர்ந்ததிரு. வி. எம். பொன்னையா தெரிவித்தார்.

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த மக்களே கூடுதலாக கலந்துகொள்வார்களென்றும் முற்போக்கு இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், பங்குபற்றுவார்களென்றும், திரு. பொன்னையா மேலும் தெரிவித்தார்.

மட்டுவில் அம்மன் கோவிலில் எந்த நேரத்திலும் ஆலயப்பிரவேசம் செய்ய இயக்கத்தினர் தயாராக இருப்பதாகவும். பூசகர் எப்போது கோவிலுக்குள் சென்று பூசைசெய்கின்ருரோ அப்போது ஆலயப்பிரவேசம் நடைபெறும் என்று திரு. நாகரத்தினம் தெரிவித்தார்

ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக மாவட்ட நீதிமன்ற தீர்ப்புவரும்வரை கோயில் பூட்டப்பட்டிருக்குமென்றும், சென்ற கிழமைபோல் பொங்கல் கோயிலுக்கு வெளியில் நடைபெறுமென்றும் கோவில் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை முதல் கோவிலை பகலும், இரவும் பொலிசார் காவல் புரிந்து வருவதாகவும் கோவில் மனேஜர் திரு. குழந்தைவேலுவின் இருப்பிடம் தனக்குதெரியாதென்றும் பரிபாலன குழுதலைவர் திரு. கே. கதிர்காமசேகரர் தெரிவித்தார்.

இன்று வெகுஜன இயக்கத்தை சேர்ந்த ஏராளமான பெண்கள் பொங்கவருவதால், பொங்கலுக்கு கேணித் தண்ணீரைப் பாவிக்கவேண்டிய நிலைமை ஏற்படலாமென்றும், கடந்த வருடம், கேணித் தண்ணீரைப் பாவித்தாகவும், இம்முறை கேணி பாவிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகவும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கதென்மராட்சி கிளைத் தலைவர் திரு. க. சுப்பையா தெரிவித்திருக்கிருர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் இன்று மாலை 6 மணிவரை கோவிலில் தங்கியிருக்கமுடிவுசெய்திருப்பதாகவும், தருணம் கிடைக்கும்போது, ஆலயப்பிரவேசம் செய்ய முயற்சிப்பார்களென்றும் கூறப்படுகிறது.

அல்வாய் வீரபத்திரன் கோவிலுக்கு செல்வதால் இன்று மட்டுவில் அம்மன் கோவிலுக்குதாங்கள் செல்லமாட்டோம் என்று புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த திரு. கே. குமாரசாமி தெரிவித்தார்.

## தெங்குப் பொருள் ஏற்றுமதி தடைப்படும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கையிலிருந்து தெங்குப் பொருட்கள் ஏற்றுமதியைத் தடைசெய்து, நாட்டின் முழுத் தேவையை அதன் மூலம் பூர்த்திசெய்து கொள்ளத் தீர்மானித்திருப்பதாகக் கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன இன்று ஆட்சி மன்றத்தில் தெரிவித்தார்.

கொப்பரா போன்ற தெங்குப் பொருட்கள் மூலம் எமக்குத் தேவையான எண்ணெய்போன்ற உபபொருட்களைத் தயாரித்துக்கொள்ள முடியுமென்று அமைச்சர் திரு. பிலிப் தெரிவித்தார்.

தெங்குப் பொருட்சபை இதுசம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## கி.பாக் துருப்புகள் சுட்டன

புதுடில்லி, மார்ச் 24

மேற்கு வங்காளம் மால்டா ஜில்லாவில் கிழக்குப் பாகிஸ்தான் துருப்புக்கள் சுட்டடன நேற்று நள்ளிரவு வரை இத்துப்பாக்கிப் பிரயோகம் நீடித்ததாக அறிவிக்கப்படுகின்றது.

பாரதத் துருப்புக்கள் தற்பாதுகாப்புக்காகச் சுட்டுக் கொண்டன. காலையில் இப்பகுதியில் அமைதி நிலவியது.

## மண்வெட்டி இறக்குமதி தடை செய்யப்படும்

கொழும்பு, ஞாயிறு

வெளிநாட்டிலிருந்து மண்வெட்டி இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்படவுள்ளது. கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன ஆட்சி மன்றத்தில் இன்று இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மண்வெட்டிகளை விட நல்ல தரமான மண்வெட்டிகள் தயாரிக்கப்பட்டபோதிலும், பழக்க தோஷத்தினுல் வெளிநாட்டு மண்வெட்டியை மக்கள் விரும்புகிருர்களாம். இந்நிலைமையை மாற்றி இலங்கை மண்வெட்டிகளை விற்பனவு செய்ய வெளிநாட்டு மண்வெட்டிகளை இறக்குமதி செய்யாது தடைசெய்வதே சிறந்த வழியென்று அமைச்சர் பிலிப் தெரிவித்தார்.

77 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இலங்கை மண்வெட்டிகள் ''தூங்கிக்'' கொண்டிருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

## அரசாங்க அதிபர் மகாநாடு

கொழும்பு, ஞாயிறு

விவசாயிகளிடையே ஐக்கியத்தை அரசாங்க அதிபர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இன்று கொழும்பில் ஆரம்பமான 3 நாள் அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் உரை நிகழ்த்திய உணவு மந்திரி திரு. எம். டி. பண்டா தெரிவித்தார்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் தஹநாயக்காவும் பேசினர். நாளைய மகாநாட்டில் பிரதமர் டட்லியும் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்.


வில்லியர்ஸ் லொட்ஜ் ப்ளக்குகள்

எம்மிடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

சென்ற். அந்தனீஸ்

(மோட்டர் ஸ்ரோர்ஸ்)

236, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(3 POINT LODGE PLUGS)

1240


## ஆலயப்பிரவேச விவகாரம்

## 'தடைகளை அகற்ற பொலிசாருக்கு அதிகாரமுண்டு'-- வடபகுதி பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், திங்கள்

''சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்த மக்கள் ஆலயத்துள் செல்வதற்கு அனுமதிப்பதற்கும், அந்த மதத்தைச் சேர்ந்த உண்மையான பக்தர்களை ஆலயத்துள் செல்லவிடாது தடுக்கும் எந்தவித தடைகளையும் அகற்றுவதற்கும் அவைகளை நீக்குவதற்கும் பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு. இது அட்டர்னி ஜெனரலின் உத்தரவாகும்.''

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலில் பூஜை நடைபெருமல் கோவில் பூட்டப்பட்டதற்கு பொலிஸ் அதிகாரிதான் காரணம் என ஆலய பரிபாலக குழுத் தலைவர் புரக்டர் கே. கதிர்காமசேகரர் தெரிவித்ததற்கு மறுப்புத் தெரிவித்து, பொலிஸ் சுப்பிரிண்டன் மேலும் தெரிவித்ததாவது:

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரச்னைக்குப் பின்னரே அட்டர்னி ஜெனரல் இந்தக் கருத்தை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் தெரிவித்தார். இதனை வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அதன் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கும் படியும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எனக்கு உத்தரவிட்டார். இந்த உத்தரவை நான் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தேன்.

கடந்த 16-ம் திகதி இரவு கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. எஸ். பி. டி. சில்வாவும், சாவகச்சேரி இன்ஸ்பெக்டர் திரு. துரைசிங்கமும் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் மனேஜர் திரு. குழந்தைவேலுவையும் மற்றும் பரிபாலகர்களையும் அழைத்து இதனையே அவர்களிடம் தெரிவித்தனர்.

சமாதானத்தை நிலைநாட்டுவதும் மக்களின் உடமைகளைப் பாதுகாப்பதும் தான் பொலிஸாரின் கடமையாகும். மக்களை அழைத்துக் கொண்டு ஆலயத்துள் போவதோ, அல்லது அதற்குக் தூண்டுவதோ பொலிஸாரின் கடமையல்லவெனவும்பொலிஸ் சுப்பிரிண்டன் குறிப்பிட்டார். கா. நி)

## பாகிஸ்தான் தேசிய தினம்

கராச்சி, மார்ச் 24

பாகிஸ்தான் தேசியதினம் இன்று கொண்டாடப் பட்டது. கட்டடங்களில் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பிரார்த்தனைகளும் நடைபெற்றன. அணிவகுப்புகள் போன்ற விசேஷ நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு, காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாகத் தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி. குப்தி வித்யாதணய, நிட்டம்புவ. 762

### தேவை

எமது தயாரிப்புகள்தயார் செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில்வரவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 782

ஜி.சி.ஈ விஞ்ஞானபாடம் படித்த வாலிபர்கள் போர்னஸ் அற்றென்டனுக (Furnace Attendant) பயிற்சி பெறத் தேவை. சிறிய தொகை பிணைப்பணம்கட்ட வேண்டும். இம்மாதம் 27 - 31-ம் திகதிக்குள்நேரில் வரவும். சேவி (Xavy) கண்ணுடித்தொழிற்சாலை, கோப்பாய். 778

உடைந்த வெள்ளைக் கண்ணுடிதொகையாகத்தேவை சேர்த்து அனுப்பக்கூடியவர்கள் தொடர்புகொள்ளவும். சேவி (Xavy) கண்ணுடித் தொழிற்சாலை, கோப்பாய். 779

### விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதியில் பொலிஸ் ஸ்டேசனுக்கு அருகாமையில்உள்ள 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடு. கடைகட்ட ஏற்றது. விபரங்களுக்கு: த. அ. செல்வராசா, சுன்னுகம் கிழக்கு, சுன்னுகம். 78

இரண்டரைப் பரப்புக் காணி நல்லூர் கோயில் வீதியிலுண்டு. விபரங்களுக்கு 141 1, கோயில் வீதி, நல்லூர். 787

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
ஞாயிறு, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - கல்பனு
நடித்த
மதுரஸ் To பாண்டிச்சேரி

ராணி
யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்.
கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா
நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்

வடஇலங்கை சங்கீதசபை

# சங்கீதப் பரீட்சை முடிவுகள்

(முன்னைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், திங்கள் வட இலங்கை சங்கீத சபையினரால் நடாத்தப்பட்ட 1968-ம் வருட சங்கீத பரீட்சைகளின் முடிவு விபரம்:

### கொழும்பு

(சாதாரணபிரிவு)

வீணை:-பி சுகந்தி, ப சிவானந்தி.

புல்லாங்குழல்:- க நரேந்திரன், க மகேந்திரன், ச மகேசன், செ டினேஸ்.

### திருகோணமலை

வாய்ப்பாட்டு: சி சுபாஷினி, ம சுமித்திராதேவி, சு கமலினி, ந விஜயலட்சுமி, ந அனந்தலட்சுமி, ச சந்திராதேவி, சி உதயராணி ந நவனீதராணி இ உதயகுமாரி.

வீணை செ. சரோஜினி.

### மட்டக்களப்பு

வாய்ப்பாட்டு:- க சாரதாதேவி, க ஜெகதீஸ்வரி, கு நகுலேஸ்வரி, க கமலாதேவி, சா சாந்தமலர், இ சுகந்தி.

வயலின்:- க இரதினி, இ ஜெயந்தி, சி மனோரஞ்சினி.

## இரண்டாம் பகுதி

### யாழ்ப்பாணம்

சாதாரண பிரிவு:

வாய்ப்பாட்டு

யோ. மொறீன்ஹேமா, யோ ஊறியூபேட் சுதானந்த, கு. குமுதகுமாரி, ஏ யசோதா. கா நிர்மலாதேவி, சு உதயகுமாரி (வாய்ப்பாட்டு) வயலின் வ ரமணி, சி காயத்திரி, சி சாந்தினி (வாய்ப்பாட்டு) வயலின்: ப ஆனந்தீஸ்வரி, அ குலமணி, க ரஜனிகாராணி, த பவானி, பா அருளானந்தேதேவி, ஆ நகுலேஸ்வரி.

வாயப்பாட்டு: ஆ தங்கேஸ்வரி, யோ ஜெயசிந்தா, ச மரியமலர், செ நளினுவதி, செ யோகாம்பிகை, மா ஜெயசுதந்தி, அ லோகேஸ்வரி, கா தேவகுஞ்சரி, அ மேரிதிரேசா சி. மனோன்மணி, க. மேரிசரோஜா, ச பிரேமளா, த செல்வமணி, தி மனோரஞ்சினி, க பரமானந்தன், ஞா ஞானரஞ்சிதம், இ சாந்தினி, சி மணிவதனம், கு கமலாம்பாள், க சிவலோகநாயகி. மு புஷ்பமலர். ப மகேஸ்வரி, தா கமலநாயகி, ப ரதிதேவி, ஜீ வத்சலா, இ சாந்தவதனு, மா தங்கராசா, ந ஜயலட்சுமி, செ இராஜராஜேஸ்வரி சோ வத்சலா இ சததியபாமா, ஐ ஜெயந்தா ந நளாயினி, ச வரதாம்பிகை, சோ கோணேஸ்வரி, ச திவ்வியகுமாரி பாஷிம்ஸினி, செ ஸ்ரீ ரஞ்சனி. ச சாவித்திரி, சே இராசவதனி, கு கௌரி, கு தஞ்சா நிர்மலா, வி பரமேஸ்வரி.

வயலின்: கு ஜெகதீஸ்வரி, இ தையல்நாயகி, கோ விஜயகுமார், ந இராஜ பாரதி, சி மல்லிகா. ப தெய்வநாயகி, க வேதலட்சுமி. கு ஜெகதீஸ்வரி, இ தையல்நாயகி.

வீணை: க சாந்தினி, கு நளாயினி.

### மல்லாகம்

வாய்ப்பாட்டு: க சத்தியவதனி, பொ சிவனேஸ்வரி, இ தெய்வீகசௌந்தரராணி, ந சுலோஜனு, ம சிவபதி, ச மாதினி, அ இராசநாயகி, அ சோதிமணி.

வாய்ப்பாட்டு வயலின்: தி தங்கராணி, கு தேன்மொழி.

### சாவகச்சேரி

வாய்ப்பாட்டு: ம பத்மலோஜனி, கு ஞானேஸ்வரி, சோ சரோஜினிதேவி, செ செல்வரதி.

வாய்ப்பாட்டு வயலின்: ச கமலாட்சி.

வயலின்: த கௌரி, செ நளாயினி, அ சேதுப்பிள்ளை, கு சிவபாக்கியம்.

வீணை: மு ஸ்ரீவல்லவாம்பிகை.

### கோப்பாய்

வாய்ப்பாட்டு: ரா நாகபூஷனி, மு கோசலை, ப நளாயினி, ச சரோஜினிதேவி, பொ. இந்திரா. சு ஜெயமங்களேஸ்வரி.

### பருத்தித்துறை

வாய்ப்பாட்டு: கு கலைச்செல்வி, பா பாலேஸ்வரி, சோ நந்தினி, ந நளாயினி

வயலின்: சி. ரஞ்சினி, சி பத்மாவதி.

### கொழும்பு

வாய்ப்பாட்டு: வை அம்பிகை, வை மங்கையற்கரசி, இ மாலினிதேவி, வ வரதக்ஷனி, மு காயத்திரி,

அரியாலை 'சுதேசிய விழா'

# மத்தியஸ்தர் தீர்ப்பை எதிர்த்து வெளியேறினர்

யாழ்ப்பாணம், திங்கள் நாவாந்துறை சென். மேரிசுக்கும், கொக்குவில் வை. எம் ஜி. கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற காரசாரமான போட்டியின் பின் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1-0கோலால் வெற்றி பெற்றதாக மத்தியஸ்தரால் அறிவிக்கப்பட்டது.

இப்போட்டி முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும்போது வை. எம் ஜி. கோஷ்டியின் முன்னணி வீரர் ஒருவர் முறை தவறி விளையாடியதற்காக மத்தியஸ்தரால் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டதால் இக்கோஷ்டியினர் மேலும் தொடர்ந்து விளையாடாமல் மத்தியஸ்தரின் தீர்ப்பு சரியில்லையென ஆட்சேபித்து மைதானத்தை விட்டு வெளியேறினர்

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே. நி)

## சென். அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் அரியாலை ''சுதேசிய விழா'' வை முன்னிட்டு யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் புனிதவளன் விளையாட்டுக்கழகத்தை 5-1 கோல்களால் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 2-வது சுற்றில் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (தே நி.)

## பருத்தித்துறை விளையாட்டுப்போட்டி

வல்வெட்டித்துறை, ஞா. பருத்தித்துறை பகுதி காரியாதிகாரி பிரிவு புத்தாண்டு விழா இம் மாதம் 26-ம் திகதி பருத்தித்துறையுனைடெட் மைதானத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியுடன் ஆரம்பமாகிறது. வருகிற மாதம் 12.ம் திகதி நீச்சல் போட்டியும், மல்யுத்தப் போட்டியும் நடைபெற்று, 13-ம் திகதி இறுதிப்போட்டி நடைபெறும்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 24—3—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ

காலை 6-30 நா...சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 ...வ..., 8 00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12 00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 தொழிலாளர்வேளை, 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பேச்சு, 7-45 வாத்தியசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்விருப்பம்.

## இன்றைய பலன்

## ம.டக் ளப்பு பிரதேச கல.மன்ற நாடகப் பே.ட்டி

மட்டக்களப்பு ஞாயிறு 1969-ம் ஆண்டுக்கு சிறந்த நாடகங்களைத் தெரிவு செய்யும் மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தின் நாடகப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு தேதி இம்மாதம் 31-ம் திகதியென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டுக் கூத்து மரபு வழி வருவன தற்கால நாடக முறையில் அமைவன என இரு பிரிவாக நடைபெறவிருக்கும் இப்போட்டி முதலில் காரியதிகாரிபிரிவுகளில் நடக்கும். தெரிவு செய்யப்பட்ட நாடகங்களே இறுதிப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

தற்கால அரசியல் பிரச்

# திருமலை செய்திகள்

— நமது நிருபர் து. பாலேந்திரா —

### ரூ. 500 அபராதம்

திருக்கோணமலையில் படுக்கை என்னும் இடத்தைச் சேர்ந்த இராசமாணிக்கம் என்பவர், திருக்கோணமலை மாவட்ட நீதிபதி திரு. ஸ்டான்லி பி. குணவர்த்தனமுன்னிலையில், டைனமைட் வெடி வைத்து மீன்பிடித்தாக சாட்டப்பட்ட குற்றத்தின்பேரில் ஆஜராக்கப்பட்டார். நீதிபதி குற்றவாளிக்கு ரூபா 500 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். இக்குற்றப் பணத்தைக்கட்டத் தவறினுல் 6 வாரங்கள் கடும் ஊழியச்சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென எச்சரித்தார். படுக்கையைச் சேர்ந்த கணேஷமூர்த்தி என்பவரின் மீதும் டைனமைட் வெடிமருந்து பாவித்து மீன்பிடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. இவரின் வழக்கை 20-ம் திகதிவரை ஒத்திப்போட்ட நீதிபதி அதுவரை அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

0 0 0

### 4 பேருக்கு தூக்கு

திருக்கோணமலை மாவட்டத்தில் தெகிவத்தை என்னும் இடத்தைச் சேர்ந்த லான்டி சில்வா என்பவர் வில்சன் சில்வா, டொனுல்ட் சில்வா, ஆர்தர் சில்வா, எட்வின் சில்வா, பனபாலா ஆகிய ஐவரினுலும் கொலை செய்யப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மட்டக்களப்பு உயர்நீதி மன்றவிசாரணைகளின்போது 8 நாட்களாக நீதியரசர் ஏ. சி. அலஸினுல் விசாரணை செய்யப்பட்டபோது முதல் நான்கு எதிரிகளும் குற்றவாளிகளெனக் கருதப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டார்கள். நீதியரசர் இவர்கள் நால்வருக்கும் தூக்குத்தண்டனை விதித்து ஏப்ரல் மாதம் முறையே 19-ம், 21-ம், 22-ம், 23-ம், திகதிகளில் கண்டி போகம்பரைத் திடலில் தூக்கிலிடவேண்டுமென உத்தரவிட்டார். 5-வது எதிரி சுற்றவாளியெனக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

### உதவி ஐ. ஜி. பி. விஜயம்

உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டெடிகம வின் கிழக்குமாகாண சுற்றுலாவின்போது குடாக்கரைப்பகுதியான சீனக்குடாவிற்கு விஜயம் செய்து அங்குள்ள பொலிஸ் நிலயத்தைப் பார்வையிட்டார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் கணேஷன் தலைமையிலான பொலிஸ் அணிவகுப்பைப் பார்வையிட்ட பின்னர், பொலிஸ் ஊழியர்களின் குறைகளையும் அவசிய தேவைகளையும் பற்றிப் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

0 0 0

### பிள்ளையார் ஆலயம்

திருக்கோணமலையில் லிங்கநகர் என்னும் இடத்தில் கோணலிங்கப் பிள்ளையார் கோவில் கட்டடத்திற்கான அடிக்கல்லைத் திருக்கோணமலை நகராண்மைக் கழகத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சிவானந்தன் நாட்டினர். இந்த அடிக்கல்நாட்டு விழாவில் திருமலை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கராசாவும் கலந்துகொண்டார்.

0 0 0

### வர்த்தக ஊழியர் சங்க மாநாடு

இலங்கை வர்த்தக ஊழியர் சங்க பிரதிநிதிகள் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. வெள்ளவத்தை சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் வாழ்க்கைச்செலவு அதிகரிப்புபற்றியும் ரூபாமதிப்புக் குறைப்பினுல தனியார் துறை ஊழியருக்கு வழங்கப்படும் அலவன்ஸ் பற்றியும் ஆராயப்பட்டது.

0 0 0

### நூல்நிலையம் அமைக்கப்படும்

திருகோணமலை நகராண்மைக் கழகத்தின் 3-ம்வட்டார அங்கத்தவரான திரு, காதர் தனது வட்டாரத்தில் ஒரு பொதுசன நூல்நிலையம் அமைக்கப்படவேண்டுமென சபைக்கூட்டத்திற் கொண்டுவந்த பிரேரனை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### 8 மைல் வீதி சிரமதானம்

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபாலா குணதீராவின் முயற்சியினுல் சிரமதான ரீதியில் ராஜ்ய லிப்பகறு சங்கமயாவைச் சேர்ந்த 1500 அரசாங்கஊழியர்கள் பெரிய குளம் என்னும் கிராமத்தின் 8 மைல் நீளமான வீதியை ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அமைக்கவிருக்கின்றனர். இந்த சிரமதான இயக்கத்திற்கு திருமலை பொதுநல சேவா சங்கத்தின் ஒத்துழைப்பையும் அரசாங்க அதிபர் கேட்டிருக்கிருர்

0 0

### தினமும் 44 மைல் பிரயாணம்

முள்ளிப்பொத்தனை குடியேற்றத் திடலில் 9-ம் தமிழ்ப் பிரிவிலுள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலையில் கல்வி புகட்டும் 4 ஆசிரியர்கள் அங்கு தங்க இடவசதியின்றி தினமும் 44 மைல் பிரயாணம் செய்து திருமலைப் பட்டினத்திற்குச் சென்று வருகின்றனராம். பாடசாலை வளவுக்குள்ளேயே இவர்கள் தங்குவதற்கு வசதி அமைத்துக் கொடுக்கும்படி பெற்ருேர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் பல விடுத்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது.

0 0 0

### மின்சாரம் விஸ்தரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் அன்புவழிபுரம், அபயபுர, செல்வநாயகபுரம் போன்ற குடியேற்றத் திட்டங்களுக்கு மின்சார விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக ஒரு புதிய மின்சார ஜெனறேற்றர் மாத்தறை மின்சாரநிலையத்திலிருந்து உப்புவெளிக்குக் கொண்டு வரப்பட இருக்கின்றது.

0 0 0

### அமைச்சருக்கு வண்டுகோள்

கின்னியா அரசினர் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக ஒரு வைத்திய அதிகாரியை நியமிக்கும்படி சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவுக்கு மூதூர் இரட்டைத் தொகுதி முதலாவது அங்கத்தவர் ஜனுப் எம். ஈ. எச். முகமதலி வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

டேவிட் பிரவுண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்.

கல்யாணகுமார், முத்துராமன், தேவிகா நடித்த

## நெஞ்சில் ஓர் ஆலயம்



யாழ்ப்பாணம்

வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

முத்துராமன், ராஜ் ஸ்ரீ, நாகேஷ், சுந்தரராஜன், ஜெயபாரதி நடித்த

## அனுபவி ராஜா அனுபவி



கெப்பிட்டல் பிளாஸா மைலன்

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹற்றன்)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

எஸ். வி. ரங்கராவ், பானுமதி முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன், நாகேஷ் நடித்த


வாசு பிலிம்ஸ் அளிக்கும்

## பூவும் பொட்டும்

டைரக்ஷன்: தாதாமிராசி



கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி, விஜயா, முத்துராமன், எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், குமாரிசச்சு இன்னும் பலர் நடித்த

ஸ்ரீதரின்

## ஊட்டி வரை உறவு

(ஈஸ்ட்மென் கலர்)

அத்துடன் காண்பிக்கப்படுகிறது யாழ் வெலிங்டன் திரையில்

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன் எஸ். எஸ். வாசன் அவர்களால் ஈஸ்ட்மன் கலரில் படமாக்கப் பட்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு கோலாகல காட்சியையும்

மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்று வதையும் பார்க்கலாம்!


செல்வி, பா பாலேஸ்வரி, சோ நந்தினி, ந நளாயினி

வயலின்: சி. ரஞ்சினி, சி பத்மாவதி.

### கொழும்பு

வாய்ப்பாட்டு: வை அம்பிகை, வை மங்கையற்கரசி, இ மாலினிதேவி, வ வரதக்ஷணி, மு காயத்திரி, கெ பிருந்தா, தி டுசிட்டா, ச ஜெயலட்சுமி, வி ஆனந்ததாஸன், இ கோமதி, கு நளாயினி, தி மஞ்சுளா, த சுஷேத்தா, இ சகுந்தலா தேவி.

வாய்ப்பாட்டு வயலின்: தி மஞ்சுளா

வீணை: இ இந்திரா, டா யஸ்மின், க கலாவாணி, து யசோதரா, வி வசந்தா, தே சுபனி.

வயலின்: வீ இரஞ்சினி.

### திருக்கோணமலை

வாய்ப்பாட்டு: இ கௌரி வதனு, க இராதாமணி, பொ சரோஜினிதேவி, சி கௌரி, கா சுலோஜனு, ச பாமதி, ஜோ வயலட், அ சாந்தினி.

### மட்டக்களப்பு

வாய்ப்பாட்டு: ந. லக்சுமி.

(தொடரும்


ராஜா 70வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)



இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா, போயா 2-30
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா நடித்த
தேர்த்திருவிழா



MANOHARA
JAFFNA
Daily 6-30 9-30 p.m.
Kamran, Sheila Kashmiri, Majnu
in
L A L-A C H
(Hindi



REGAL at Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m.
Muga Takewaki, Jitsuko Yoshimura
n
SECRET AGENT 101
(color)


ரம், 10-00 நேயர்விருப்பம்.

## இன்றைய பலன்

(24-3-69)

பங்குனிமாதம், 11 உ

திங்கட்கிழமை

திதி- சஷ்டி பகல் 3-27 மேல் சப்தமி.

நட்சத்திரம்- ரோகிணி பிற்பகல் 5-30 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம்- 7-46-9-16.

சுபநேரம்-12-16-1-46.

இன்று பிறந்தவர்களுக்கு - இல்லறச் சுகம் இனியவை கேட்டல். கண்ணில் நோய் குஷ்டம் கவலையும் நீங்கும். தன விருத்தி தானியம் சேரும். இனக் குரோதம் இருப்பிட மாற்றம், நோக்கும் தொழில் ஊக்கம் காட்டில் சிறப்பைக் கொடுக்கு நல்லாண்டாகும்

மேஷம்- கழுகுப் பார்வை, கவலையும் உண்டு.

ரிஷபம்- நம்பநட நம்பிநடவாதே.

மிதுனம்- உயர்ந்த நோக்கு உரிமை கிடைக்கும்.

கடகம்- அன்னிய நாட்டம், அமைதிக்கு பங்கம்.

சிம்மம்- புதுப்பொருள் வரவு புதினம் கேட்பீர்;

கன்னி- பிள்ளைப்பாசம் கொள்ளை இன்பம்.

துலாம்- கருடப் பார்வை, காத்திருக்கும் பகை.

விருச்சிகம்- இல்லறம் இனிக்கும் விருந்தும் உண்டு.

தனுசு- கரும்பாக இனித்தது வேம்பாகக் சகக்கும்.

மகரம்- பெற்றூர் நலன் பெருமையும் உண்டு.

கும்பம்- முயற்சி வெல்லும், முதலிடம் உண்டு.

மீனம்- பொருள்வரவு புகழ்பட வாழ்வீர்.

— சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

வடுவன தற்கால நாடக முறையில் அமைவன என இரு பிரிவாக நடைபெற விருககும் இட போட்டி முதலில் காரியதிகாரிபிரிவுகளில் நடக்கும். தெரிவு செய்யப் பட்ட நாடகங்களே இறுதிப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

தற்கால அரசியல் பிரச்னைகள் கலக்கப்படாமல் சமூகம், வரலாறு, இலக்கியம் ஆகிய பற்றியும் நாடகங்கள் அமையலாம். ஒன்றரை மணித்தியாலங்களுக்குள் இவை அமைவதாயிருக்க வேண்டும். பங்குபற்ற விரும்பும் நாடக மன்றங்கள் அவ்வப்பகுதி காரியாதிகாரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலை விழா

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ்ப்பாணம் ஜெயசக்தி மன்றம் ஏப்ரல் முதலாம் திகதி மாலை யாழ். திறந்த வெளி அரங்கில் கலைவிழா வொன்றை நடாத்தவிருக்கிறது. இன்னிசை நாட்டியம், நாடக நிகழ்ச்சிகள் இதில் இடம்பெறுகின்றன.

## ஐ. நா. பிரதிநிதி கலந்துகொள்வார்

புத்தூர், திங்கள்

செம்மணி பயிர்ச்செய்கைக்குழுவினரின் கூட்டமொன்று இன்று நல்லூர் வடக்கு ஸ்ரீகணேச வித்தியா விருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய நிறுவனத்தின் பிரதிநிதி திரு. ஆமீர்ரசா நெற்காணிச் சட்ட மதிப்பீடு பற்றி மேற்படிசங்க உறுப்பினருடன், கலந்துரையாடுவார்.

## வவனியா எம். பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஞாயிறு

''சென்ற 67-ம் ஆண்டு முதல் இதுவரை முல்லைத்தீவில் மிருகவைத்தியர் இல்லாதகுறையை நீக்காதது பெருங்குறையாகும். எனவே கூடியவிரைவில் மிருகவைத்திய அதிகாரியை அனுப்பி இப்பகுதிமக்களின்குறையை நீக்கவும்'' என வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உணவுவிவசாய அமைச்சருக்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுள்ளார்.


# டேவிட் பிரவுண்


770-36 குதிரை சக்தி

880-46 குதிரை சக்தி


முன்கைகிருப்பில் இருந்த டிராக்டர்கள் இப்போது கிடைக்கும்

ரூபா 18750/- (''பிக்ஸ்'' உட்பட்டது)

ரூபா 20000/- (''பிக்ஸ்'' உட்பட்டது)



அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட



3 முதல் 3½ தொன் நிறை கொள்ளும் உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

தொடர்பு கொள்ளுங்கள்.

ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்

ரோலன்ஸ் லிமிட்டெட் (துணைக் கம்பெனி) டீரட் ரோட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS

GPL-R-T-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமவாசிகள் வீடுகளைவிட்டு ஓட்டம் பிடிக்கிறார்கள்

## கிழக்குப் பாகிஸ்தானில் கொலை கொள்ளை தீவைப்பு நீடிப்பு

### அமைதியாய் இருக்க அயூப் வேண்டுகோள்

கராச்சி மார்ச் 23

படுகொலைகள், தீ வைப்புகள், கொள்ளையடிப்புகள் போன்ற பயங்கர செய்திகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வந்து கொண்டிருக்கும் அதே வேளையில் அமைதியாக இருக்கும்படியும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கும்படியும் அதிபர் அயூப்கான் பாகிஸ்தான் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

பாகிஸ்தான் தேசிய தினத்தையொட்டி அதிபர் அயூப்கான் தேசமக்களுக்கு விடுத்த செய்தியிலேயே இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றார். இன்று பாகிஸ்தான் முழுவதும் தேசிய தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆனால் வழமையாக இடம்பெறும் கொண்டாட்டங்கள் இல்லை. ராணுவ அணிவகுப்பும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கிழக்குப் பாகிஸ்தானில் பயங்கரம் தாண்டவமாடுவதாக உள்நாட்டு மந்திரி அறிவித்திருக்கிறார் மக்கள் படுகொலை செய்யப்படுவதாகவும், தீ வைப்புகளும், கொள்ளையடித்தலும் தொடர்வதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். கிராம வாசிகள் பயத்தினால் ஊர்களைவிட்டு ஓடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கிழக்குப்பாகிஸ்தானில் ஆயிரத்துக்கதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. கடந்த சில வாரங்களில் டாக்காவில் கொலையானவர் உட்பட 140 பேர் கொலையாகியுள்ளனர்.

மேற்குப் பாகிஸ்தானிலும் தொழிலாளர் போராட்டங்கள் தொடர்கின்றன. கராச்சியில் நேற்று அமெரிக்க தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அயூப் எதிர்ப்பாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்குமிடையில் ஏற்பட்ட கலவரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று 4 பேர் காயமடைந்தனர்.

சீனபாணியில் புரட்சி நடத்தமுயன்ற

## கேரள நக்ஸல்பாரிகள் 148 பேர் மீது வழக்குத்தாக்கல்

### குன்னிக்கல் நாராயணனும் அஜிதாவும் முக்கியஎதிரிகள்

கோழிக்கோடு, மார்ச் 23

கேரள நக்ஸல்பாரிகள் 148 பேர் மீது கோழிக்கோடு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குன்னிக்கல்நாரயணன், அவர்மனைவி மந்தாகினி, புதல்வி அஜிதா ஆகியவர்கள் முக்கிய எதிரிகள். கம்யூனிஸ்ட் சீனபாணியில் இந்தியாவில் ஆயுதப் புரட்சி நடத்த இவர்கள் முயன்றதாகக் குற்றம் சாட் [illegible]

தலைச் சேரி, பூல்பள்ளி பொலிஸ் நிலையங்கள் மீது கேரள நக்ஸல் பாரிகள் ஆயுதங்களுடன் நடத்திய தாக்குதல் பற்றி பொலிசார் விசாரணை நடத்தியபோது சீனபாணியில் இந்தியாவில் ஆயுதப்புரட்சி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது தெரியவந்ததாம். இந்தியாவிலுள்ள சீனத்தூதர அதிகாரிகள் எதிரிகளுக்கு எழுதிய கடிதங்களும் இந்த வழக்கில் தாக்கல் செய் [illegible]யப்பட்டுள்ளன. மாசேதுங்கின் சிந்தனைகளால் இவர்கள் ஊக்கப் பெற்றதாகவும் மாசேதுங்கின் சிந்தனைகள் மலையாளத்தில் மொழி பெயர்க்கப் பட்டு இவர்கள்மத்தியில் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

148 எதிரிகளில் 38 பேர் இன்னமும் தலைமறைவாக இருக்கின்றனர். 12 பேர் பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

## அங்குய்லா தீவில் பிரி. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 23

கரிபியன் அங்குய்லா தீவில் பிரிட்டிஷ் துருப்புகள்போய் இறங்கியதன் பின்னர் நேற்று முதல் தடவையாகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிகமாகப் பெண்களே கலந்து கொண்டனர். பிரிட்டிஷ்கமிஷனர் திரு. லீ தமது மாளிகைக்கு போவதற்காக காரில் வந்தபொழுது சுமார் 300 பேர் காரைச் சூழ்ந்து கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சிலர் அவருடையசட்டையில் பிடித்துத் தள்ளியதாகவும் கூறப்படுகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொலிசார் கலைப்பதற்கு முயற்சிசெய்தபோது இரு பொலிசார் காயமடைந்தனர். ஆனால் ராணுவம் அழைக்கப்படவில்லை.

திரு. லீ அங்குய்லா மக்களுக்கு விடுத்த அறிக்கையில் பிரிட்டிஷ் நிதிஉதவி அளிப்பதுபற்றி வாக்குறுதி அளித்தார். ஆயுதங்களை ஒப்படைத்து விடும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் அங்குய்லா தீவின் தலைவர் திரு. வெப்ஸ்டர் நியுயோர்க் போய்ச் சேர்ந்திருக்கிறார். தமது நாட்டின் பிரச்னையை அவர் ஐ.நா வில் எடுத்துக் கூறப் போவதாக அறிவித்துள்ளார்.

ம. பிரதேச சட்டசபை

## காங்கிரஸ் தலைவர் பதவியை மிஸ்ரா கைவிட்டார்

### மந்திரிசபை அமைப்பதில் சிக்கல் நீங்கியது

புதுடில்லி, மார்ச் 23

மத்திய பிரதேசத்தில் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள திரு. டி. பி. மிஸ்ரா முடிவுசெய்திருக்கிறார்.

சம்யுக்தவிதாயக்தல் மந்திரிசபை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி புதிய மந்திரிசபை அமைக்கும்படி கோரப்படலாம் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால் திரு. மிஸ்ராவை கவர்னர் மந்திரிசபை அமைக்கும்படி அழைப்பதா இல்லையா என்ற பிரச்னை தோன்றியிருந்தது, திரு மிஸ்ரா கடந்த தேர்தலில் வெற்றிபெற்றது செல்லுபடியாகாதென மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த வழங்கியிருக்கின்றபடியால் அவர் முதன்மந்திரி பதவியை ஒப்புக்கொள்வது சம்பந்தமாக சிக்கல்கள் தோன்றின. உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து அவர் அப்பீல் செய்தபோதிலும் பதவியை ஏற்பது நல்லபண்பாக அமையாது என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இப்பொழுது திரு. மிஸ்ரா காங்கிரஸ் கட்சியின் சட்டசபைத் தலைவர் பதவியிலிருந்து தாமே விலகிக்கொண்டிருப்பதால் அவருக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்படும் தலைவர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்க வழிபிறக்கலாம்.

திரு மிஸ்ரா தேர்தலின்போது குறிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக 249 ரூபாய் செலவுசெய்ததாகவும் இது தேர்தல் ஊழலைக் குறிப்பதாகவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

## தங்கக் கடத்தல் கோஷ்டி கைது

புதுடில்லி, மார்ச் 23

ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்துவதில் ஈடுபட்டிட்டிருந்த கள்ளக்கடத்தல் கோஷ்டியொன்று பம்பாயில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கிறது.

## 5 ஆயிரம்பேர் ஜூனில் திரும்புவர்

சென்னை, மார்ச் 23

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இந்தியர்களில் அடுத்த ஜூன்மாதம் சுமார் 5 ஆயிரம் பேர் வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் நீலகிரி கன்யாகுமரி, அந்தமான் போன்ற இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள். திருநெல்வேலி கோயமுத்தூர், மதுரை போன்ற இடங்களிலும் இவர்களுக்கு வேலையளிப்பதற்காக விசைத்தறிகள் நிறுவப்படுகின்றன.

## அமெரிக்கா பயணம்

பருத்தித்துறை, ஞாயிறு

மட்டக்களப்பு அரசினர் கல்லூரி ஆசிரியர் திரு. வி. சுந்தரலிங்கம் இம்மாத இறுதியில் ஆசிரியர் பவுண்டேசன் ஸ்தாபனத்தாரின் உதவியில் விஞ்ஞானம் கற்பித்தல் முறையில் ஆராய்ச்சி செய்வதற்காக அமெரிக்கா செல்லவிருக்கிறார்.

சுதுமலையைச் சேர்ந்த திரு. சுந்தரலிங்கம் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவராவா.

## கி. ஜெர்மனி செல்கிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாண வங்கியின் சாவகச்சேரிக்கிளை மனேஜர் திரு [illegible]

## 'வேகமான மாற்றத்துக்கு பாலம் வழிவகுக்கும்

### வவனியா எம். பி.

வவனியா ஞாயிறு

வவனியாவில் பூவரசங்குளம், மருதமடு வீதியில் 20 அடி நீளமுள்ள நவீன பாலத்திறப்பு விழா நேற்று வவனியா எம் பி. திரு. ரி. சிவசிதம்பரத்தால் திறந்து வைக்கப்பட்டது.

இத் திறப்புவிழாவின் போது திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

''சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக இருந்த திரு. டி. எஸ். சேனநாயகாவின் சிராஷ்த்த தினத்தில் இவ்வித பாலத்திறப்புவிழா நடைபெறுவது மிகப்பொருத்தமானதே.

பாலம் பல தொடர்புகளை ஏற்படுத்த உதவுவதோடு நேரத்தையும் மீதப்படுத்துகிறது. இவ்விதமாக இருபத்திரண்டு மாவட்டங்களில் ஒரே தினத்தன்று 22 பாலங்களை திறப்பதற்கு ஏற்பாடு செய்த அமைச்சரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இன ஐக்கியத்துக்கும் பல கருத்துவேறுபாடுகளை நீக்கி சுமுகமான சூழ்நிலை உருவாவதற்கும் பின் தங்கியுள்ளவர்கள் முன்னுக்கு வருவதற்கும் இப்பாலங்கள் பெரிதும் உதவுகின்றன.

பேச்சளவில் மட்டும் நில்லாது உள்ளூராட்சி அமைச்சர் செயலளவில் நடந்து கொள்கிறார் என்பதற்கு நவீன பாலத்திட்டம் ஒரு எடுத்துக்காட்டு.

பொது மராமரத்துப் பகுதியினரால் எத்தனையோ நாட்கள் பிடிக்கக்கூடிய பாலங்களை சில மணி நேரத்திலேயே அமைத்து முடிப்பதற்கு திட்டம் வகுத்தது சமுதாயத் துறையில் பெரிய மாற்றத்தை தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

பல வேறுபட்ட மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தவும் உணவுப் பொருளாதாரத்துறையில் வேகமான முன்னேற்றத்தை அடையவும் இப்பாலங்கள் வழிவகுக்கும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. நல்லைநாதனும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டார்.

'வவனியாவில் 370 ஆசிரியர் இல்லை

## படித்தமாணவர்களை காலி இடங்களில் நியமிப்பேன்'

— வவனியா எம். பி,

வவனியா, ஞாயிறு

வருகிற மாதத்துக்குள் வவனியா மாவட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்காவிடில் இங்குள்ள படித்த மாணவர்களையும், பட்டதாரிகளையும் அவ்வவ் இடங்களில் நியமிக்கப்போவதாக வவனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் கல்வி அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

வவனியா பாடசாலைகளில் 370 காலி இடங்கள் இருப்பதாகவும், பலவருடமாக இவற்றை நிரப்பும்படியும் இங்குள்ள பொதுஸ்தாபனங்கள் கல்வி அமைச்சிடம் கோரிவந்தன. இதுவரை காலமும் பொறுத்திருந்துவிட்டு தாம் இவ்வித முடிவை எடுத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வவனியா பிள்ளைகள் பின்தங்கிய நிலையில் இருக்க வேண்டியதாக கல்வி அமைச்சு நடந்து வருவது வருந்தத்தக்கது என்றும் திரு. சிவசிதம்பரம் எம். பி. எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சேமமடு மகாவித்தியாலயக் கூட்டமொன்றில் பேசுகையிலும் [illegible]

## குழந்தையின் சங்கிலி யுவதியிடம்

யாழ்ப்பாணம் திங்கள்

மூன்றரை வயதுக் குழந்தையின் அரையிலிருந்து காணமல் போன தங்கச் சங்கிலியொன்றை 16 வயது யுவதி ஒருவரிடமிருந்து மீட்டனராம் பொலிஸார்.

அரியாலைப் பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட 16 வயது யுவதி இம் மாதம் 29-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த மூன்றரை வயதுக் குழந்தையின் அரையில் கட்டப்பட்டிருந்த 500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை பொலிஸார் மீட்டுள்ளனராம்.

சந்தேக நபரை மீண்டும் இம்மாதம் 29-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. வி. பரமகுரு உத்தரவிட்டார்.

(கா நி)

## பட்டினசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இந்த வழக்கில் குன்னிக் கல்நாரயணன், அவர்மனைவி மந்தாகினி, புதல்வி அஜீதா ஆகியவர்கள் முக்கிய எதிரிகள். கம்யூனிஸ்ட் சீனபாணியில் இந்தியாவில் ஆயுதப் புரட்சி நடத்த இவர்கள் முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றது.

குதல் பற்றி பொலிசார் விசாரணை நடத்தியபோது சீனபாணியில் இந்தியாவில் ஆயுதப்புரட்சி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது தெரியவந்ததாம். இந்தியாவிலுள்ள சீனத்தூதர அதிகாரிகள் எதிரிகளுக்கு எழுதிய கடிதங்களும் இந்தவழக்கில்தாக்கல் செய்

மலையாளத்தில் மொழி பெயர்க்கப் பட்டு இவர்கள்மத்தியில் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது.

148 எதிரிகளில் 38 பேர் இன்னமும் தலைமறைவாக இருக்கின்றனர். 12 பேர் பிணையில் விடுதலையாகியுள்ளனர்.

ப்பதா இல்லையா என்ற பிரச்னை தோன்றியிருந்தது, திரு மிஸ்ரா கடந்த தேர்தலில் வெற்றிபெற்றது செல்லுபடியாகாதென 'மத்திய பிரதேச உயர்நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியிருக்கின்றபடியால் அவர் முதன்மந்திரி பதவியை ஒப்

வழிபிறக்கலாம்.

திரு மிஸ்ரா தேர்தலின்போது குறிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக 249 ரூபாய் செலவுசெய்ததாகவும் இது தேர்தல் ஊழலைக் குறிப்பதாவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

மாணவராவா.

# எல்லைக்காவலர்களுக்கு சோவியத் உயர்விருது

மாஸ்கோ, மார்ச் 23

தமாகன்ஸ்கித் தீவில் சீன அதிகாரிகள் நடத்திய ஆத்திரமூட்டல்களை முறியடிப்பதில் பங்குபற்றிய சோவியத் எல்லைக்காவலர்களுக்கு மிகஉயர்ந்த சோவியத் ராணுவ கௌரவமான 'சோவியத் யூனியன் வீரர்' விருதுகளை வழங்குவதென ஐ.சோ.சோ. கு. சுப்ரீம் சோவியத்தின் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது என்று டாஸ் அறிவிக்கின்றது. அச்செய்தி கூறுவதாவது:-

ஜூனியர் ஸேர்ஜன்ட் யுரி பபான்ஸ்கி' சீனியர் லெப்டினன்ட் விடாலிபுபெனின் ஆகியோருக்கும் எல்லையில் உயிர் நீத்த இரு அதிகாரிகளான கேர்னல் டெமோகிராட் லியனோவ், சீனியர் லெப்டினன்ட் இவான் ஸ்ட்குரல்னிகோவ் ஆகியோருக்கும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன. சோவியத் ராஜ்ய எல்லைகளைப் பாதுகாப்பதில் இவாகள் வெளிக்காட்டிய துணிச்சலுக்கும் வீரத்திற்காவும் இந்த கௌரவம் அளிக்கப்படுகிறது.

கேர்னல் லியனோவின் தலைமையில் எல்லைக்காவளர்கள் ஆத்திரமூட்டல்காரர்களின் தாக்குதலை பலமணிநேரமாக எதிர்த்துப்போராடி முறியடித்தார்கள். தளபதி வீரராக வீரமரணம் எய்தினார்.

மார்ச் 2ந்திகதி அத்துமீறிப் பிரவேசித்தவர்களை முன் சென்று அணுகி சோவியத் பிரதேசத்திலிருந்து வெளியேறுமாறு கோரிய சோவியத் எல்லைக்காவலர்கள் கோஷ்டிக்கு இவான் ஸ்ட்ரெல்னிகோவ் தலைமை தாங்கினார்- சீன அதிசூரக் காரர்கள் துப்பாக்கிச் சூட்டை ஆரம்பிப்பதன் மூலம் பதிலிறுத்தனர். வீரம்மிக்க அதிகாரி கொல்லப்பட்டார்

விடாலி புபெனின் துருப்புக்களில் கவசன வா... தொகுதிக்குத் தலைமை... தார். ...வர்மிக நுட்பமாக

இப்படையை முன்னடத்தியதினால் கொள்ளைகாரர்கள் பலர் எதிரப்புகளுடன் ஓட்டம் பிடித்தனர். ஜூனியர் செர்ஜன்ட் பபான்ஸ்கி அற்புதமான வீரத்தை வெளிப்படுத்தினார்.

சீன ஆத்திரமூட்டல்காரர்களின் தாக்குதலை முறியடித்த எல்லைக்காவற்படை வீரர்கள் கோஷ்டிக்கும் கிவியன் கோஷ்டிக்கும் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு விருதுகளையும் பதக்கங்களையும் வழங்கியுள்ளது.

---

## புதுச்சேரி சபாநாயகர்

புதுச்சேரி, மார்ச்23

புதுச்சேரி சட்டசபையின் சபாநாயகராக திரு. எஸ். பெருமாள் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்.

---

## எம்.ஜி.ஆருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

எம். ஜி. ராமச்சந்திரன் 100 படங்களில் நடித்து முடித்ததைப் பாராட்டுமுகமாகவும், தமிழ்நாடு முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பதவியேற்றுள்ளதைப் பாராட்டுமுகமாகவும் நாளைய தினம் யாழ். எம். ஜி. ஆர். ரசிகர்கள், பழைய பஸ்நிலையத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்துகின்றனர்.

உடுவில் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மட்டுநகர் எம். பி. திரு. செ. இராசதுரை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இன்னிசைக் கச்சேரிகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## சட்ட தமிழ் நூல்

சென்னை, மார்ச் 23

தமிழில் உருவாக்கப்பட்ட சட்ட சொல் அகராதியை நேற்று தமிழ் நாடுமுதலமைச்சர் திரு கருணாநிதி வெளியிட்டு வைத்தார். இந்நூலுக்கு சட்டத்தமிழ்நூல்என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. ஆட்சிமொழிக் கமிஷன் இந்நூலை உருவாக்கியிருக்கிறது.

## சுப்பிரமணிய வரவேற்பு

திருச்சி, மார்ச். 23

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது பற்றியும் அதற்கான வழிகள்பற்றியும் ஆராய நிபுணர்குழு நியமிக்கவேண்டுமென தமிழ்நாடுமுதலமைச்சர் திரு. கருணாநிதி வெளியிட்ட யோசனையை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம் வரவேற்றிருக்கிறார்.

மொழிப் பிரச்னையிலும் இதேமனப்பான்மையைக் காட்டுவாரெனத் தாம்எதிர் பார்ப்பதாக திரு. சுப்பிரமணியம் கூறினார்.

## த. வா. மு. கூடுகிறது

அளவெட்டி, ஞாயிறு

தமிழரசு வாலிபமுன்னணி செயற்குழுக் கூட்டம் இம் மாதம் 25-ம் திகதி தலைவர் செ. இராசதுரை தலைமையில் நடைபெறும்.

உடுவில் திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கும் 11-வது மாநில மகாநாடுக்கான தீர்மானங்கள் பற்றி இதில் ஆராயப்படும்.

கலைப்பாலம் உருவாக

# கலைஞர் சங்கங்கள் ஒன்றுபடவேண்டும்

நடிகர் பகவதியின் விருப்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

'தமிழ்நாட்டுக்கும் ஈழநாட்டுக்குமிடையே கலைப்பாலத்தைஅமைக்க இரண்டு நாட்டிலுமுள்ள கலைஞர்களும், சங்கங்களும் ஒன்றுபடல் வேண்டும். கலைஞர்கள் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாக வெளிவரும் 'ஈழநாடு' பத்திரிகைக்குச் சிறப்பான எதிர்காலம்உண்டென்று இந்தியக் கலைஞர்கள் சார்பில்நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றுக் காலை தாயகம் திரும்பிய தமிழ் நாடக சினிமா நடிகரான திரு. டி. கே. பகவதி பலாலி விமான நிலையத்தில்வைத்து 'ஈழநாடு' மூலம் விடுத்த பிரியாவிடைச் செய்தியில் இவ்வாறு தெரிவித்தார்.

கலையரசர் விழாவில் கலந்துகொள்ள அகிலஇலங்கை இளம் நடிகர் சங்கத்தின் அழைப்பை ஏற்று இங்கு வந்திருந்த திரு. டி. கே.பகவதி தமது பிரியாவிடைச்செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள தி.மு.கவுக்கும், இந்தியாவிலுள்ள தி. மு. க.வுக்கும் எந்தவிதத் தொடர்புமே கிடையாது. கலைஞர்களைக் கட்சிக் கண்கொண்டு எந்த அரசாங்கமுமே பார்க்கக்கூடாது. தி. மு. க. பூச்சாண்டியினாலேயே தமிழக கலைஞர்கள் இங்கு வரக்கஷ்டமேற்படுவதை என் விஜயத்தின் மூலம் நான்உணர்ந்துகொண்டேன் வேண்டுமானால் இரண்டு நாட்டு அரசுகளுமே இது பற்றி நேரில் சந்தித்துத் தங்கள் சந்தேகங்களை உடனடியாகத் தீர்த்துகொள்ளலாம்.

மீண்டும் அடுத்த மாதத்தில் நானும் எனது அண்ணன் டி. கே. ஷண்முகமும் யாழ்ப்பாணம் வர எண்ணியுள்ளோம் எமது ஆவல் நிறைவேறினால் அது எமக்குக் கிடைக்கும் ஒரு பாக்கியம் என்றே நாம் எண்ணுவோம்.

'ஈழநாடு'நடுநிலைமை வகிக்கும் ஒருசிறந்த பத்திரிகை. செய்திகளை உடனுக்குடன் பிரசுரிப்பதோடு, கலைஞர்களுக்கும் போதிய ஆதரவு கொடுக்கின்றது. ஆனல் தலைநகரான கொழும்பில் இப்பத்திரிகை காலையில் கிடைப்பதில்லை. இந்தக் குறைகள் நீங்க ஈழம் வாழ் தமிழ்மக்கள் உழைக்க வேண்டும்.

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக பத்திரிகைத்துறை விரிவுரையாளர் திரு. இரத்தினமும், மாணவர்களும் விமானநிலையத்துக்கு வழியனுப்ப வந்திருந்தார்கள்.

(கா. நி.)

---

## உலக கம். கட்சி மகாநாடு

மாஸ்கோ, மார்ச் 23

உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்ட் நாடுகளின் மகாநாடு மாஸ்கோவில் அடுத்த ஜூன் மாதம் நடைபெறவிருக்கின்றது. ஒன்பது ஆண்டுகளின் பின் முதல் தடவையாக இந்த மகாநாடு நடைபெறுகின்றது. சம்பிரதாயப்பூர்வமாக சீனாவும் இந்த மகாநாடுக்கு அழைக்கப்படும்.

## 11 தெ. ஆபிரிக்கருக்கு தண்டனை கிடைக்கும்

கேப்டவுன், மார்ச் 23

தென்னாபிரிக்க அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி புரிந்தார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்த 11 கறுப்பர்களை தென்னாபிரிக்க நீதிமன்றம் ஒன்று குற்றவாளிகளாக தீர்மானித்திருக்கிறது. இவர்கள் மீதான தண்டனை பிறகு அறிவிக்கப்படும். விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த 12-வது நபர் விடுதலை செய்யப்பட்டார்.

## கி. ஜெர்மனி செல்கிறார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாண வங்கியின் சாவகச்சேரிக்கிளை மனேஜர் திரு. ஏ. பி. தணிகாசலம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் உபகாரச் சம்பளம் பெற்றுச் செல்கின்றார். இவர் அங்கு ட்றெஸ்டனிலுள்ள சர்வதேச கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுநிர்வாகம் பற்றி பயிற்சி பெறுவார்.

பொருளாதாரத்துறை (வங்கி) பட்டதாரியான திரு. தணிகாசலம் வங்கி சம்பந்தமான வேறு பரீட்சையொன்றிலும் சித்திபெற்றுள்ளார். இவர் அங்கு தங்கியிருக்கும்போதும் பல பரீட்சைகளில் தோற்றுவார் திரு. தணிகாசலம் துன்னாலையைச் சேர்ந்த திரு. வி. பொன்னையாவின் மகனும் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. ஜே. எஸ்.வேலாயுதத்தின்மருமகனுமாவார்.

---

## சைக்கிள் திருட்டு 3 மாதம் கடூழியம்

குரும்பசிட்டி, ஞாயிறு

சைக்கிள் திருட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவருக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் மூன்று மாதக் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

சென்ற வருடம் ஆடி மாதம் 7-ம் திகதி உரும்பராயைச் சேர்ந்த கணபதி பொன்னுத்துரை என்பவருக்கு சொந்தமான சைக்கிளை திருடியதாக இவ் வழக்கில் சுன்னாகம் பொலிஸார் ஊரெழு வாசியான ரி. சிவசுப்பிரமணியம் மீது குற்றஞ் சாட்டியிருந்தனர்.

பொலிஸ் தாப்பில் சப்-இன்ஸ்பெக்டர் பெரேரா வழக்கை நடத்தினார்.

## ஆணையாளர் ஆட்சேபம்

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடி பட்டினசபை பிரதம எழுதுவினைஞர் திரு எம் கந்தசாமி மட்டக்களப்பிலுள்ள ஓட்டமாவடிக் கிராமச்சபைக்கு மாற்றப் பட்டுள்ளதை எதிர்த்து மேற்படி பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. ஏ.ஏ. ஜோசப்பு உள்ளூராட்சி ஆணைக்குழுவுக்கு ஒரு ஆட்சேபக் கடிதத்தை அனுப்பியுள்ளார்,

வவனியா பிள்ளைகள் பின்தங்கிய நிலையில் இருக்க வேண்டியதாக கல்வி அமைச்சு நடந்து வருவது வருந்தத்தக்கது என்றும் திரு. சிவசிதம்பரம் எம். பி. எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சேமமடு மகாவித்தியாலயக் கூட்டமொன்றில் பேசுகையிலும் ஆசிரியர் நியமனம்பற்றிக் கூறி, சட்டத்துக்கு மாறாக ஆசிரியர்களை வருகிற மாத முடிவில் தாம் நியமிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

## 'செயலற்றதென நினையாதீர்'

— பண்டிதர்

அளவெட்டி, ஞாயிறு

''தமிழரசுக் கட்சியினர் இந் நாட்டின் இனத்தின் விடுதலையிலேயே கண்ணும் கருத்துமாய்இருக்கிறார்கள். போராட்டங்களை சந்தர்ப்பத்துக்கு தகுந்தவாறு மாற்றிஅமைக்கவும், நியாயத்துக்காக சிலகாலம் காத்துக்கிடக்கவும் வேண்டியுள்ளது. அப்படி நாம் இருந்தால் ''தமிழரசுக் கட்சி செயலற்று போய்விட்டது என்று எவரும் நினைக்க வேண்டாம்.''

இவ்வாறு இலங்கை தமிழரசுக்கட்சி கிளிநொச்சி கிளையின் வருடாந்த கூட்டம் கிளிநொச்சி கணேசபுரத்தில் நடைபெற்றபோது கலந்துரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. வ. த. அழகரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இன்றுள்ள நிலையில் தமிழர்கள் என்னசெய்யவேண்டும் என்பதை எமது 11-வது மாநில மகாநாடு தீர்மானிக்கும் என்றும் திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

## உதிரிப்பாகங்கள் கைப்பற்றப்பட்டன

நல்லூர், ஞாயிறு

சைக்கிள் உதிரிப் பாகங்களுடன் கரையூர் பொலிசாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

முஸ்லீம் தெருவைச் சேர்ந்த நயினா முகமது என்பவரிடமிருந்து கைப்பற்றப் பட்ட உதிரிப்பாகங்கள் கொட்டடியைச் சேர்ந்த கனகராசா என்பவரதுசைக்கிளிலிருந்து களவாடப்பட்டதாக பொலிசார் கருதுகின்றனர். கைப்பற்றப் பட்ட சைக்கிள் பார், சீற் இரண்டையும் தவிர்ந்த மிகுதிப் பாகங்கள் பொலிசில் வைக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபரை மீண்டும் இம்மாதம் 29-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. வி. பரமகுரு உத்தரவிட்டார்.

(கா நி)

## பட்டினசபை நிர்வாகம் தமிழில்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறை பட்டினசபை நிர்வாகம் இனி தமிழில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான தீர்மானம் நேற்று காங்கேசன்துறை பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

இத்தீர்மானத்தை 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. இம்மனுவேல் பிரேரிக்க 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. திடவீரசிங்கம் ஆமோதித்தார்.

காங்கேசன்துறைப் பகுதியில் சகலதும் தமிழ்மொழிப் பாவனையில் இடம்பெற வேண்டும் என்ற நோக்குடன் திரு. தெட்சணாமூர்த்தி தலைமையில் ஆரம்பிக்கப் பட்டுள்ள தமிழ் பாதுகாப்பு இயக்கத்தின் முதலாவது நடவடிக்கையின் படியே பட்டினசபையில் தமிழ் நிர்வாகமொழியாக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## ஒடும்பஸ்ஸில் 'ஜேப்படி' மோதல்

கொழும்பு, ஞாயிறு

ஓடும் பஸ்ஸில் பிக்பொக்கட்காரர்களுக்கும் மிதிபலகை பிரயாணிகளுக்கும் பிக்பொக்கட் காரணமாக நடைபெற்ற ஒரு மோதலில் பஸ்ஸில் இருந்து வெளியே தவறிவிழுந்த பலர் காயமடைந்த சம்பவம் நேற்று கொழும்பு திர்கஸ்கந்திய என்னும் இடத்தில் நடைபெற்றது

ஓடிக்கொண்டிருந்த பஸ்சில் மிதிபலகையில் நின்றுகொண்டிருந்த பிரயாணி ஒருவரின் மணிப்பர்சை எடுக்க பிக்பொக்கட் காரர்கள் சிலர் முயற்சி செய்த காரணத்தினாலேயே இந்த மிதிபலகை மோதல் ஏற்பட்டதாக மேற்படி பஸ்ஸில் வேலைசெய்த கொண்டக்டர் தெரிவித்தார்.

மிதிபலகையில்பிரயாணம் செய்த குற்றத்துக்காக நூற்றுககு மேற்பட்ட பிரயாணிகள் மீதும் கொண்டக்டர்கள் மீதும் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அஹிம்சை என்பதற்கு மிகுந்த அன்பு, அதிக அளவு தயை என்பதே பொருள்.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 11-ந்திகதி
(24-3 69)


## தி. மு. க. பற்றிய தெளிவு

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினால் இலங்கை அரசாங்கத்துக்கு பிரச்னை எதுவும் இல்லையென்றும் இலங்கையில் தி. மு. க. என ஒன்றிருப்பதே தவக்குச் சரியாக தெரியாதென்றும் இலங்கை தி. மு. கழகத்துடன் இந்திய தி. மு. கழகத்துக்கு அரசியல் தொடர்பு எதுவும் இல்லையென அமரர் அண்ணுதுரை உட்பட தமிழ் நாடு தலைவர்கள் அளித்த உறுதிமொழிகள் தமக்குத்திருப்தியளித்திருப்பதாகவும் இலங்கை ராஜாங்க அமைச்சர் கோயம்புத்தூரில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் உண்மையைக் கூறியிருக்கிறார் இதை முன்னரே இங்கு தெரிவித்து அரசியல் இலாபத்தை நோக்கமாகக் கொண்ட விஷமப் பிரசாரங்களுக்குமுற்றுப்புவளிவைக்க முன் வந்திருக்கலாம். தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்துள்ளதன் பயனாக உண்மைகளை அறிய திரு ஜயவர்த்தனவுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நாடு திரும்பிய பின்னர் உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறி தி. மு. க. பற்றி பூச்சாண்டிக்கு முடிவு கட்ட அவர் முன்வார் என நம்புவோம்.

தி. மு. க. பற்றிய பூச்சாண்டி அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட பொய்ப் பிரசாரம் என்பதை ஒரு சில அமைச்சர்களும் மற்றும் சிலரும் அறிவர். ஆனாலும் எந்தச் சந்தர்ப்பத்தையும் தமக்காகப்பயன் படுத்திக் கொள்ளத்தயாராக இருக்கும் மக்களுக்கு இந்தப் பிரசாரம் நல்ல வாய்ப்பளிக்கும் பாமரமக்கள் இந்தப் பிரசாரத்தின் உண்மை, பொய்யை ஆராய்ந்தறியும் நிலைக்கு இன்னமும் வரவில்லை. அமரர் அண்ணுதுரை தமிழ்நாட்டின் முதல் அமைச்சராகப் பதவியேற்றதும் இங்கு தி. மு. க. பூச்சாண்டி கிளப்பப்பட்டது. அச்சமய தமிழ் நாடு மேல்சபை உறுப்பினர் திரு. சி. பி. சிற்றரசு உத்தி இங்கு விஜயம் செய்தார். தி. மு. க. பற்றிய தப்பபிப்பிராயத்தை நீக்க முயன்றார் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்திக்க முன் வந்தார். "சிற்றரசு அல்ல அண்ணுதுரையே வந்து சொன்னலும் தி. மு. க. பற்றிய எனது கருத்து மாருது" என்று அவர் சந்திக்க மறுத்து விட்டார். "தூங்குபவனை எழுப்பலாம்; தூங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியாது" என்பது அனுபவ ரீதியான முதுமொழியானலும் "அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழியையும் நினைவு கூர வேண்டும். இதற்கு ராஜாங்க அமைச்சர் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்ததன் மூலம் உண்மைகளை அறிந்து கொள்ளக் கிடைத்த வாய்ப்பும் ஓர் உதாரணம்.

இலங்கையும் இந்தியாவும் புராதன காலம் தொட்டே பல துறைகளிலும் நெருங்கிய தொடர்புள்ளவை அந்த உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளவேண்டியதுஇரு நாடுகளுக்கும் அவசியம். இந்த உறவை உள் நாட்டு அரசியல் ஆதிக்கப் போட்டிகள் கெடுத்து விடக் கூடாது.

எனவே ராஜாங்க அமைச்சரின் தமிழ்நாட்டு விஜயம் எடுத்துக் காட்டியிருக்கும் நற்பயனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு அரசாங்கம் இந்திய மத்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும் கொண்ட ஆட்சி மன்ற உறுப்பினர் குழுவொன்றை இந்தியாவுக்கு அழைக்கவும் அதே சமயம் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட தி. மு. க. தலைவர்களையும் கொண்ட சட்டமன்ற உறுப்பினரின் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி தமிழ்நாடு பற்றியும் இந்தியா பற்றியும் இங்கு சிலர் கிளப்பிவிடும் தப்பபிப்பிராயங்களை நீக்குவதற்கு முயற்சி செய்யலாம். நட்புறவில் இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கு உண்மையான அர்வமிருந்தால்

# ஒழுக்கமிக்க மாணவ சமுதாயத்தை கட்டிஎழுப்பிய ஆசிரியசிற்பி

**இராமநாதன் பெண்கள் கல்லூரி அதிபராயிருந்து அடுத்த மாதம் ஓய்வுபெறவிருக்கும் செல்வி யோ. கனகசபைக்கு இன்று நடைபெறும் பிரியாவிடையையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

'காலனி' ஆட்சி காலத்தில் சிறுவர்களை பள்ளிகளுக்கு கொண்டுவருவதைவிட சிறுமிகளைக் கொண்டுவருவது பெரும் பாடாகவிருந்தது. பெண்களின் சமூக அந்தஸ்து அப்பொழுது மிகவும் தாழ்வாகவிருந்தது. பெரிய சீதனத்தைக் கொண்டுவர வேண்டுமென்று பெண்கள் எதிர்பார்க்கப்பட்டனர் இது அவாகளின் தாய்மாருக்கு ஒரு பெரிய சுமையாகும். திருமணத்தின்பிறகு அவர்கள் தங்களுக்கு தாமே உரியவர்களாகவுமில்லாமல் பிறந்தகத்துக்கு முரியவராயும் இல்லாமல் வழமையாகவே தமது கணவன்மாரின் குடும்பங்களுக்கே உரியவர்களானார்கள். இந்தச் சூழ்நிலையில் முற்போக்கு மனப்பான்மைகொண்ட ஒரு சில பெற்றார்தான் பெண்களின் கல்விபற்றி அதிகமாக அக்கறைப்பட்டனர். புதிய கருத்துக்களும் புதுப் பொருளாதார சக்திகளும் நிலைபெறத் தொடங்கிவிட்டதால் இவை யாவும் இப்பொழுது பெரிதும் மாறிவிட்டன. மரபு வழக்கங்கள் தகர்ந்து கொண்டிருக்கின்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெண்கள் வெளி வேலைத் தலங்களுக்குப் போய்த்திரும்புவதாகும் ஒரு புரட்சியாகவே இருந்திருக்கும்.

பெண்களின் விசேஷத் தேவைகளுக்கேற்ப அமைந்த பாடத்திட்டங்களுடன் கூடிய தனி இரண்டாந்தர பாடசாலைகள் பெண்களின் மேம்பாட்டுக்கு இலங்கையில் பெரிதும் உதவியுள்ளன உண்மை ஜனநாயகத்தின் சுழல் விசையாகக் கருதப்படும் வாக்குரிமையை அனுபவிக்கும் நிலைக்கு பெண்கள் வளர்வதற்கு பரந்த அடிப்படையிலானகல்விதான் சிறந்த வழியாக அமையும் என்று தாமே பெரிய சீர்திருத்தவாதியான சேர் பொன்னம்பலம் இராமநாதன் உணர்ந்தார் அவரது முன்னேடி முயற்சிகள் பயனளித்துள்ளன இராமநாதன் கல்லூரி மிகப் பல வீடுகளை பிரகாசிக்கச்செய்திருக்கிறது. இன்று அது பெண்களுக்காக சிறப்பு மிக்க ஸ்தாபனமாக விளங்குகின்றது. படித்த பெண்கள் நல்லவர்கள் திருமணத்திற்குப்பிறகு தம் கணவன்மாருக்கு உதவக்கூடியவர்கள் எல்லாவற்றுக்குமேலாக தமது வளர்ந்த பருவத்தில் விவேகமிக்கப் பிரஜைகள் என்ற மனப்பான்மையை மக்கள் மத்தியில் இந்த ஸ்தாபனம் நிலைபெறச் செய்திருக்கின்றது.

பெண்களுக்கான இதர, சிறந்த கல்வி நிலையங்களைப் போலவே அதிபர்கள் விஷயத்திலும் இராமநாதன் கல்லூரி அதிர்ஷ்டமுடையதாகவே இருந்திருக்கிறது.

உயரிய நோக்கத்துக்காக 32 ஆண்டுகள் உழைத்துள்ள அதிபர் செல்வி யோகம் கனகசபை அவர்களைப் போல மரியாதைக்கும் நினைவு கூறுவதற்கும் அதிக தகுதி உடையவர் இல்லையென்று கூறலாம். அவர் இயற்கையாலும் வளர்ப்பினுலும் இரட்டை ஆசீர்வாதம் பெற்றவர் இவருடையதகப்பனரிடம் காணப்பட்ட 'நக்கீரர்' தன்மை இவரிடமும் பிரகாசிப்பதைக் கண்டு எவரும் அதிர்ச்சியுறாமலிருக்கவியலாது காலஞ்சென்ற முடிக்குரிய வழக்கறிஞர் கனகசபை இணையற்ற துணிச்சலுக்கும் நீதி வழங்குவதில் காட்டும் உறுதிக்கும் பேர் போனவர் ஆற்றல் மிக்க சட்ட வல்லுனர்கள் தமது கட்சிகளை திறமாக எடுத்தியம்பும் பாடு நீதி பதியாக வீற்றிருக்கையில் இந்த குணங்கள் அவரிடம் சிறப்பாக வெளிப்பட்டன. ஒழுக்கசீலத்தை உறுதியாக வலியுறுத்துபவரான அதிபர் யோ கனகசபை அவர்கள், குழந்தைகளின் மனப் போக்குபற்றி ஆழமாக உணரக்கூடியவர். எம்மாதிரி உயர்நிலையிலிருப்பவரும்அவர் கருத்தைமாற்றிவிடவியலாது. தந்தையைப் போலவே, 'ஆம்' என்பதற்கு 'ஆம்' என்றும் 'இல்லை' என்பதற்கு'இல்லை' என்றும் தயக்கமின்றிப் பதில் சொல்லக்கூடியவர்.



**— என். சபாரத்தினம் —**
**(அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)**

ஆசிரியர் தொழிலில் பற்றுதலோடுஈடுபடுவதற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்தான் அவர் சரியான சந்தர்ப்பத்தைப்பெற்றார், அங்கு பத்தாண்டுகள் பயனுள்ள பணி புரிந்ததன் மூலம் வாழ்க்கை முழுவதும் தியாகம் செறிந்த ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு அங்கு அவர் தகுதிகளைப் பெற்றார். அவரது மிடுக்கான உடையையும் இனிமையான சொல் பிரயோகமும், சாந்தமான உறுதி மிக்க போக்கும் எங்கெங்கு தொழில் புரிந்தாரோ அந்த மாணவர் பரம்பரையின் மனக்கண்களில் நீங்காதநிலையானதொரு தோற்றப் பொலிவை ஏற்படுத்திக் கொடுத்தது. வட இந்து மகளிர்கல்லூரி, பாக்கிய வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம் போன்றவற்றில் அதிபராகக் கடமையாற்றியதின் மூலம் தமது அனுபவத்தை அவர் செழிப்புறச்செய்து கொள்ள முடிந்தது. இதன் மூலம் இராமநாதன் கல்லூரி பெரிதும் பயன்பெற்றது.

செல்வி கனகசபைக்கு ஒரேஒரு காதல் - கற்பிப்பது - அது அவர்கவனத்தை முற்றுக ஈர்த்தது. மாணவ பரம்பரையை சீராக வளர்ப்பதிலும், வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க தேவைப்படும் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிப்பதிலும் உதவ முடிந்ததே என்ற தமது கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்து அவர் திருப்திகொள்ள முடி

ஆசிரியருக்கு கடிதம்

# திருப்பெருந்துறை திருக்கேதீச்சரம்

ஈழதேசத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக உன்னத நிலையைப் பெற்றிருந்த மாதோட்டமே 'பெருந்துறை' எனவும், திருக்கேதீச்சரம் அக்கோயிலுள்ள பகுதியின் பெயர் எனவும் காணப்பட்ட ஒரு கொள்கையை ஆமோதித்து, அக் பிரிக்க முடியாது சம்பந்தப்பட்டிருப்பது. சிவபிரான், அடிகளாரை ஆட்கொள்வான்வேண்டி, பரமாசாரிய வடிவம் பூண்டு, 'பொ[illegible] மண்[illegible]' தருளியிருந்த 'ஒரு தெய்விக வழும்பதி'. இது தமிழகத் ரம் எனப் பெயர்கொண்டது. கேதீச்சரலிங்கம்அமைக்கப்பெற்றது. அளவிலாத் தொன்மையும் மேன்மையும் வாய்ந்தது. மூர்த்தி தலதீர்த்த மகிமைகள் ஒருங்கே அமையப்பெற்றது. தேவார மூர்த்திகள், இருவரால் இப்பெயரால், பாடித்துதிக்கப்பட்டது. இதன் ஆதிமூல காரணமான. சாந்நித்தியமான பெயரை மாற்றிய ழைக்கவேண்டுமெனும் அவசரப் பிரேரணைக்கு பிரமாதமான கோட்பாடுகள் எவையும் கூறப்படவில்லையே; மாதோட்டமே பெருந்துறையென சர்வசம்மத

## ஐயாறன் எழுதுவது

தலையில் காந்தி குல்லாய், நெற்றியிலே பளிச்சென்று விபூதியும் சந்தனப்பொட்டும் கூடிய சிவப்பொலிவு. தூய வெண்மையான சட்டைக்கு மேல் இடுப்பில் கட்டிய அங்கவஸ்திரம், கம்பீரமான தோற்றம்...... இன்னும் சொல்லவேண்டுமா? இது யாரென்று யாழ்ப்பாணத்தில் யாருக்குத்தான் தெரியாது, அப்படி யாருக்கும் தெரியாதாயின் அவர் அறியாதாரே!

முதலியார்முத்துத்தம்பிப் பிள்ளை அவர்களது 80-வது ஜயந்தி நேற்று நடந்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்துவிட்டு பல உள்ளங்கள் அவரை வாழ்த்தும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பாக அவரை கொழும்பில் முதல் முதல் கண்ட போது யாரோ இந்திய பிரமுகர் என்றுதான் நினைத்தேன். அவர் இந்தியா சென்றிருக்கையில். பலரும் அவரை "இந்தியாவில் நீங்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்? என்று தான் கேட்டார்களாம்!

மகாத்மாகாந்தி, ராஜாஜி முதலிய இந்திய தலைவர்களிடம் மிகுந்த விசுவாசம் கொண்டவர். மகாத்மாவை நேரில் சந்தித்துப் பேசும் பாக்கியம் பெற்றவர். இலங்கை - இந்திய நற்புறவுக்கும் தமிழ்ப் பண்புக்கும் அவர் ஓர் சின்னமாவார். வயது எண்பதாகியும்' அவரது உள்ளமோ இன்னும் இளமையானது. அவர் இளமையின் ரகசியத்தை சில நாட்களுக்குமுன் கேட்டேன். "யார் மீதும் வெறுப்போ, எரிச்சலோ கிடையாது. கூடுமான உதவிகளைச் செய்வது. என் கடன் பணிசெய்து கிடப்பதே என்றுஇறைவனை நம்பிவாழ்வது. இதுவே என் மன நிம்மதிக்குக் காரணம்" என்றார்.

"ஈழநாடு" வாரப்பதிப்பிலே தொடர்ந்து அவர் எழுதும் சில அரிய கட்டுரைகளை அன்பர்கள் படித்திருக்கலாம். பலர் இக் கட்டுரைகளைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலே என்ன விசேஷம் எங்கு நடப்பினும் சரி. அங்கு அவரைக் காணலாம்- அவர் இல்லாத கூட்டம் நிறைவுபெருது.

எந்தச் சபைக்கும் ஒரு மதிப்புக்கொடுக்கக்கூடியது அவரது தோற்றம். கூட்டத்தில் பேச வேண்டாமென்று டாக்டர்கள் யோசனை கூறினும். அவர் தம் உடல்நலத்தையும் பாராமல், கூட்டங்களில் பேசி, தமது அன்புக் கடமையை நிறைவேற்றி ஆசீர்வதிப்பார்.

அவரது விரிந்த உள்ளம் நன்மையையே கண்டு போற்றும். அடுத்த வருஷம் அவரது 81-வது பிறந்த நாளை இங்குள்ள பொதுமக்கள் நன்றியுடன் சிறப்பாகக்கொண்டாட வேண்டும். அவர் நீடூழிவாழப் பிரார்த்திக்கின்றேன்.

0 0 0

நேற்றுக்காலை எழுந்து, பின்கதவைத் திறக்கச் சென்றபோது, அதுதிறந்தே இருந்தது! முதல் நாள் இரவு 10-30 மணிக்குத் தாளிட்ட கதவு எப்படித் தானகத் திறந்தது? உடன் உள்ளே வந்து பார்த்தேன் மேசை மீதிருந்த டிரான்ஸிஸ்டர்ரேடியோ பெட்டியை காணேம். சிபார்ப் பணம்! சில வாரங்களுக்கு முன் என்னுடனிருக்கும் ஓர் அன்பரின் கைக்கடிகாரமும் இவ்விதமே மறைந்தது. பொலிசில் புகார்செய்ய விருப்பமில்லை. புகார்செய்து என்ன பயன்.

முன் ஒருமுறை எனது கைக்கடிகாரம் காணமற் போய் மீண்டும் கிடைத்தது. அதைப் பின்னர் ஒரு தேவைப்பட்ட அன்பர் தெரியாமல் எடுத்துக் கொண்டுவிட்டார். அத்துடன் கைக்கடிகாரம் கட்டுவதையும்நிறுத்திவிட்டேன். இனி ரேடியோவும் கேட்க வேண்டாமென்பது இறைவனின் திருவுள்ளம் போலும்!

0 0

முத்திசையும் புனற்
பொன்னி மொய்பவளங்
கொழித்துந்தப்
பத்தர் பலர் நீர்மூழ்கிப்
பலகாலும் பணிந்தேத்த
எத்திசையும் வானவர்கள்
எம்பெருமானென
இறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறர்க்
களாய் நான்
உய்ந்தேனே.

— அப்பர் அடிகள்.

# 'ஒருவர் தலைப்பக்கம் வெட்ட மற்றவர்காலை வெட்டினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன். உண்மை, இலங்கை ஆரம்பித்தறியும் நிலைக்கு இன்னமும் வரவில்லை. அமரர் அண்ணாதுரை தமிழ்நாட்டின் முதல் அமைச்சராகப் பதவியேற்றதும் இங்கு தி. மு. க. பூச்சாண்டி கிளப்பப்பட்டது. அச்சமய தமிழ்நாடு மேல்சபை உறுப்பினர் திரு. சி. பி. சிற்றரசு உத்தியோகப் பற்றற்ற முறையில் சட்டமன்ற உறுப்பினின் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி தமிழ்நாடு பற்றியும் இந்தியா பற்றியும் இங்கு சில் ளிப்பிவிடும் தப்பபிப்பிராயங்களை நீக்குவதற்கு முயற்சி செய்யலாம். நட்புறவில் இலங்கை இந்திய அரசாங்கங்களுக்கு உண்மையான ஆர்வம் இருந்தால் இவை பெரிய காரியமில்லை.

## ஹோட்டல் ஊழியர்

தொழிற் கமிஷனர் தலைமையிலுள்ள ஊதிய சபையின் சிபார்சுக்கிணங்க கொழும்பு நகரிலுள்ள 209 சிறிய ஹோட்டல்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மேற்பட்ட ஊழியருக்கு சம்பளத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இதுவரை சம்பள விகிதம் என ஒன்று ஹோட்டல் ஊழியர்களுக்கு இருக்கவில்லை. இந்த சம்பளத் திட்டம் ஹோட்டல் ஊழியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமென்று கூடச் சொல்லலாம்.

ஆனல் கொழும்புநகருடன் மட்டும் இத்திட்டம் நின்றுவிடக்கூடாது. கொழும்பு நகரிலுள்ள சிறு ஹோட்டல்களிலும் கூட 'டிப்ஸ்' எனப்படும் சந்தோஷப்பணம் அங்குள்ள பரிசாரகர்களுக்குக்கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது. இந்த வாய்ப்பு யாழ்ப்பாணம் மற்றும் நகரங்களில் மிக மிகக் குறைவு. கொழும்பு நகருக்கு வெளியேயுள்ள இடங்களிலும் ஹோட்டல் ஊழியர்களுக்கு சம்பள விகிதம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த சம்பள விகிதம் கொழும்பு நகரிலுள்ள ஹோட்டல் ஊழியர்களை விட வேறுபட்டதாக இருக்கவேண்டும். கொழும்பு நகர ஹோட்டல ஊழியர்களுக்கு சம்பளத் திட்டம் வகுத்தவர்களைப் பாராட்டும் அதேசமயம் ஹோட்டல் ஊழியர்கள் கொழும்புக்கு வெளியேயிருக்கிறார்களென் பதையும் இத்துறை ஊழியர்களுக்கும் இந்நன்மை கிடைக்கவேண்டுமென்பதையும் நினைவூட்டுகிரேம்.

## தாழையடியில் விரைவில் கடற்படை முகாம்?

யாழ்ப்பாணம், திங்கள்

வடக்கில் இன்னுமொரு கடற்படை முகாம் விரைவில் நிறுவப்படலாம். இதற்கான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டுவருவதாகத் தெரிகின்றது.

அடுத்தகடற்படை முகாம் தாழையடிக் கரையோரத்தில் நிறுவப்படுமென்றும் இதற்கான இடத்தைத் தெரிவுசெய்ய கடற்படை அதிகாரிகளைக் கொண்ட கோஷ்டியொன்று இம்மாத இறுதிக்குள் வடக்குக்கு வரவாமெனவும் அறியப்படுகின்றது.

வடக்கில் தற்போது காரைநகரில் மட்டுமே கடற்படை முகாம் ஒன்று இருக்கின்றது. வடபகுதியின் சகல கடற்கரைகளிலும் ரோந்துசுற்று படையினரின் தொகை போதாமலிருப்பதாலேயே தாழையடியிலும் மற்றொரு முகாம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சட்டவிரோதக் குடியேற்றம். கள்ளக்கடத்தல் போன்ற குற்றச்செயல்களை இத்திட்டத்தின் மூலம் தடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (கா நி)

## பணியகம்

அளவெட்டி, ஞாயிறு

இலங்கை தமிழரசுக் கட்சியின் 11-வது மாநில மகாநாடு உடுவிலில் நடைபெறுவதையிட்டு இணுவிலில் மகாநாட்டு பணியகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இதை திறந்து வைத்தார்.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஈழதேசத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக உன்னத நிலையைப் பெற்றிருந்த மாதோட்டமே 'பெருந்துறை' எனவும், திருக்கேதீச்சரம் அக்கோயிலுள்ள பகுதியின் பெயர் எனவும் காணப்பட்ட ஒரு கொள்கையை ஆமோதித்து, அக்கொள்கையின் வழியே ஈழத்துச் சைவமக்கள் திருக்கேதீச்சரத்தைத் 'திருப்பெருந்துறை' யென அழைக்க முற்படவேண்டுமென 'ஐயாறன்' எழுதிவருவதைப் பல மாதங்களாக வாசித்து வருகிறேம்.

இக்கொள்கைக்கு மாறுன அபிப்பிராயம் கூற யாரும் இதுவரை முன்வராமையால், இப்பிரசாரம் பலவிதமாகத் தீவிரப்படுத்தப்பட்டு வருவது மிகக்கிளர்ச்சியைத் தருகின்றது,

ஈழநாடு 2-3-69 இதழில் எழுதப்பட்டிருக்கிறது.

திருக்கேதீச்சரத் தேவஸ்தானத்தார் திருப்பெருந்துறை எனுஞ் சொல்லைப் பாவிக்கவில்லை. ஏன் இதில் தயங்கவேண்டும்?............ ஈழத்திலுள்ளவர்களே இதை திருப்பெருந்துறை எனக் கூறத் தயங்குகையில் தமிழகத்திலுள்ளவர்களை எப்படி இதை ஒப்புக்கொள்ளச் செய்யமுடியும்?

திருப்பணிச்சபையாரும் தேவஸ்தானத்தாரும் ஈழத்திலுள்ள சைவசமய ஸ்தலங்களும் திருப்பெருந்துறை என்றே திருக்கேதீச்சரத்தை அழைக்க முன்வரவேண்டியது அவசியமாகும். இப்படிச் செய்வதில் யாருக்கு என்ன நஷ்டம்: என்பதாக.

இப்படிச் செய்வதற்கு 'அவசியம்' யாதும் இல்லை. யாவருக்கும் 'நஷ்டம் பலவகையான நஷ்டம் என்று கூற நான் முற்படுகிறேன். திருக்கேதீச்சரத்தின் தனிப்பெருந் தொன்மைக்கும், ஆதியான பெயருக்கும், மூர்த்திதல தீர்த்த மகிமைக்கும் திருப்பெருந்துறையென இற்றைவரைபோற்றப்பட்டு வரும் திவ்வியபதியின் பிரத்தியேகமான மாட்சிமைக்கும், சான்ற சரித்திர-நூல் ஆராய்ச்சி வாய்மைக்கும் தமிழக-ஈழ சைவமக்களின் ஒன்றிய ஒருமைப்பாட்டுக்கும் நஷ்டம் - பெருநஷ்டமாகும்,

இப்பிரசாரம் ஓயாது வலியுறுத்தப்பட்டு வருவதால். எனது சிற்றறிவுக்குத் தெரிந்த பின்வரும் குறிப்புகளையும், ஈழநாடு வாசகர்கள் தக்கவாறு அவதானிப்பார்களென வேண்டி, இங்கே எழுதத் துணிந்தேன்.

திருப்பெருந்துறை என்னும் திருப்பதி, திருவாதவூரடிகள் சரித்திரத்துடனும் திருவாசக நூலுடனும் பிரிக்கமுடியாது சம்பந்தப்பட்டிருப்பது. சிவபிரான், அடிகளாரை ஆட்கொள்வான்வேண்டி, பரமாசாரிய வடிவம் பூண்டு, 'பொன்னடி யெனுஞ் சலச மண்மிசை பொருந்த' எழுந்தருளியிருந்த 'ஒரு தெய்விக வழம்பதி'. இது தமிழகத்திலே உள்ளதென சான்றுகள் பல உள்ளன. இப்பெயரால் இப்போ வழங்காதிருக்கக்கூடுமாயினும், தமிழக மக்களாலும், ஈழமக்களாலும் ஒருமையான ஆர்வத்தோடு பாராட்டப்பட்டுவருவது.

திருவாதவூரடிகள் புராணத்தில், பெருந்துறை சோழநாட்டில் உள்ளதெனவும் (மண்சுமந்த சரு. 26, 39, 40) பலவளங்களும் நிறைந்த ஒரு தபோவனம் என்பதாகவும் (பெருந்துறை சரு. 9 18) மதுரையில் இருந்து சோழநாட்டுக்கடல் துறைக்குச் செல்லும் மார்க்கத்திலிருக்கும் ஒரு ''ஊர்'' எனவும் (பெந்ருதுறை சரு. 107),

'எம்பரனருட்கரையிலேறு
துறையாமா
லம்புவிமொழிந்துள
பெருந்துறையதன்பேர்'
(பெருந்துறை சரு. 10)

என்பதால். இப்பெயர் ஒரு கடல்துறையைக் குறிக்கும் பெயரல்ல, ஒரு காரணப் பெயர் என்பதுவும் தெளிவாகிறது. (மற்றும். மண்சுமந்த சரு. 76, 92, 93-ம் பார்க்கலாம்) இன்னும் பெருந்துறை என்னும் பெயர்க்காரணம்' என்ற தலைப்பில், இப்புராணத்துக்கு உரை எழுதிய உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையின் கருத்தையும், பெருந்துறைச் சருக்க இறுதியில் காணலாம்.

புராணச்சான்றுகள் ஒருபுறம் இருக்க, திருவாசகம், கீர்த்தித்திருவகவவில், குதிரையைக் கொண்டுகுடநாடதன் மிசைச் சதுர்படச்சாத் தாய்த்தானெழுந்தருளியும்' எனக் கூறப்பட்டதால், பெருந்துறை மதுரைக்கு கிழக்கேயுள்ளதென்பது வெள்ளிடைமலை. [கா. சுப்பிரமணியபிள்ளையின் திருவாசக உரையையும் பார்க்கலாம்].

**மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாக்கே அன்றி, வேறுசான்றும் வேண்டுமோ— 'பெருந்துறை' எங்கே உள்ளது என்று நிர்ணயிப்பதற்கு!**

**திருக்கேதீச்சரம்-** மாதோட்டமே பெருந்துறைஎன, வலிந்து சான்றுகள் காட்ட முயல்வதால் இத் தேவஸ்தானத்தின் ஆதியானபெயருக்கும் ஆபத்து நேருமோவென அஞ்சவேண்டியிருக்கின்றது. இது கேதுவினுலே பூசிக்கப்பெற்றதால் கேதீச்சரம் பட்டது. இதன் ஆதிமூல காரணமான. சாந்நித்தியமான பெயரை மாற்றியழைக்கவேண்டுமெனும் அவசரப் பிரேரணைக்கு பிரமாதமான கோட்பாடுகள் எவையும் கூறப்படவில்லையே;

மாதோட்டமே பெருந்துறையென சர்வசம்மதமாக அங்கீகரிக்கப்பட்டால், அந்த 'துறை'ப் பகுதியில் ஒரு 'தபோவனத்தை' உருப்படுத்துவதற்கு ஈழத்துச் சைவ மக்கள் திரண்டெழுந்து முன்வந்து இயங்குவதல்லவோ திருவருள்வழியாகும். இதுவன்றி, பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், வாதவூரடிகளார் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எப்பெருந்தன்மைத் தாயினும், அவைகாரணமாக, ஆதியான பெயருடன் வழங்கி வருவதும், தன்னகத்தேசுய மாட்சிமைகள் அனைத்தும் பொருந்தியதுமான தேவஸ்தானத்தை, பெயர்மாற்றி அழைக்க, அல்லது 'பெருந்துறை' எனும் பெயரையும் இணைத்து அழைக்க சமய சாஸ்திர ரீதியான ஆதாரங்கள் வேண்டாவா!

**திருவாசகம்:** திருவாதவூரடிகளார் சிவபுராணம் முதலாக திருவாசகம் பாடத் தொடங்கியது பெருந்துறையில் என்பது வரலாறு பதிகங்கள் 51-ல் 20 வரையில் பாடப்பெற்றது. அப்பதியிலே எனக் காணப்படுகிறது. எந்த ஒரு பாட்டிலாயினும் அடிகளார் ஈழநாட்டுக்கு வந்தாரெனக் கூறுவதற்கு வெள்ளிடையான சான்றுகளைக்காணேம் கேதீச்சர மூர்த்தி தலம் தீர்த்தம் எதுவும் சொல்லப்படவுமில்லை. அகச் சான்றுகள் யாதும் இன்றி அடிகளார் மாதோட்டம் என்னும்பெருந்துறைக்கு இரு முறையாக வந்தார் சிவகுரு தரிசனம் திருவடி தீட்சை பெற்றார். அடியார்களுடன் குழுமி தெய்வ பீடம் அமைத்து பூசித்தார் திருவாசகம் பாடத்தொடங்கினர் இங்கேயுள்ள 'பொய்கை'யில் தோன்றிய சோதியில் அடியார் கூட்டம் கலந்து மறைந்தபின்னர் இங்கிருந்து உத்தரகோசமங்கைசென்றார். என்றவாறெல்லாம் நிர்ணயப் படுத்துவதற்கு ஆதாரமான சான்றுகள் எங்கே காணப்படுவன.

**அவசிய கருமம் எது?** சமய சரித்திர சாஸ்திர நுண்பொருள் ஆராய்ச்சிக்குரிய இவ் விஷயம் சைவப் பெருமக்களால் ஆழ்ந்து ஆரய்ந்து தெளிந்து ஒப்புணர்ந்து தீர்மானிக்க வேண்டிய பெரும் பணியாகும் இதுவே அவசியம்.

**மு. அம்பலவாணர்**
கொழும்பு

பரம்பரையை சீராக வளர்ப்பதிலும், வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க தேவைப்படும் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிப்பதிலும் உதவ முடிந்ததே என்ற தமது கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்து அவர் திருப்திகொள்ள முடியும்.

'கற்க முடியாதவர்கள்எல்லாம்கற்பிக்க ஆரம்பித்துவிட்டார்கள்'' என்று பரிகசித்தார். ஒஸ்கார்வைல்ட். 'முடிந்தவன் முயல்கிறுன், முடியாதவன் படிப்பிக்கிறுன்' என்றுர் பெர்ணுட்ஷா. ஆனல் இருவருமே செல்வி கனகசபைபோன்று சிறப்புமிக்க பெண்களைப்பற்றி அறிய தவறிவிட்டார்கள். ஒரு ஜாடிக்குள் சற்றுப்பாலை வார்ப்பதுபோல் சிறுவருக்கு அறிவு ஊட்டுவதை அவர்கள் கருதவில்லை. ஆய்வுகள் நடத்தவும், தாமே கற்கவும் மாணவர்களை ஊக்குவிப்பதும், உணர்த்துவதும் அவர்கள் கடமையாகவிருக்கிறது. செல்வி யோ. **கனசபை** போன்ற சிறப்பான குணநலன்கள் பெற்றவர்கள் தான். பிலாட்டோ கூறுவதுபோல் மற்றவர்களுக்கும் கொடுக்கக்கூடிய தீபத்தை வைத்திருக்கிறுர்கள். எனவே இராமநாதன் கல்லூரியின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொள்ளலாம்.

## கைப்பணிப் பொருட் காட்சி

யாழ்ப்பாணம், திங்கள்

மத்திய கொக்குவில்மாதர் சங்க ஆதரவின்கீழ் மத்திய கொக்குவில் தையற் தொழிலாளர் சங்கம் கைப்பணிப் பொருட் காட்சியொன்றை இன்று புதுக்கோயில் வடக்கு வீதியில் நடாத்துகின்றது.

பிரதம விருந்தினராக நல்லூர் எம். பி. நாகநாதன் கலந்துகொள்வார்.

## அண்ணு கவிதாஞ்சலி நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம். திங்கள்

'அறிஞர் அண்ணு கவிதாஞ்சலி' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணமலாயன் கபே மேல்மாடியில் இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் நடைபெற விருக்கிறது.

கவிஞர் வி. கந்தவனம் நூல் வெளியீட்டுரை நிகழ்த்த திரு. எஸ். கிருஷ்ணசாமி முதற்பிரதியை வாங்குவார். யாழ்பாணனுல் தொகுக்கப்பட்ட இந்நூலுக்கு புதுமைலோலன், திரு. க. கணேசலிங்கம் ஆய்வுரை நிகழ்த்துவார்.

விசேஷம் எங்கு நடப்பினும் சரி. அங்கு அவரைக் காணலாம்- அவர் இல்லாத கூட்டம் நிறைவுபெறுது.

களாய் நான்
உய்ந்தேனே.
— அப்பர் அடிகள்.

# 'ஒருவர் தலைப்பக்கம் வெட்ட மற்றவர்காலை வெட்டினுர்'

## வெள்ளாங்குளம் கொலைவழக்கு சாட்சியம்

யாழ்ப்பாணம் திங்கள்

2-ம் எதிரி பாடசாலைக்கு பக்கத்திலிருந்த பொல்லை எடுத்து சிவஞானசுந்தரத்திற்கு அடித்ததும் அவர் நிலத்தில் விழுந்தார். 1-ம் எதிரி தலைப் பக்கத்திலும் 3-ம் எதிரி கால் பக்கத்திலும் நின்று அவரை வெட்டினுர்கள். அதன்பின் ஒருவர் பின் ஒருவராக 1-ம் 2-ம் 3-ம் எதிரிகளும் போனுர்கள்.

வெள்ளாங்குளம் கொலை வழக்கில் சாட்சியமளித்த ச. தம்பிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினுர். இவ் வழக்கு விசாரணை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல். டி. இரெஸ்டர் முன்னிலையில் நேற்றுக்காலை ஆரம்பமானது.

இவ்வழக்கில் 67-ம்ஆண்டு ஜூன் மாதம் 2-ம் தேதி வெள்ளாங்குளத்தில் ஏரம்பு சோதிலிங்கம், ஏரம்பு கார்த்திகேசு, ஏரம்பு சிதம்பரநாதன் ஆகியோர் சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரத்தைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஈ. பி. சத்துருகுலசிங்கமும் 2-ம் எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதனும் 3 ம் எதிரி சார்பில் அட்வகேட் ரி. தம்பித்துரையும் புறக்டர் ஆர். விஸ்வநாதன் புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்கள். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி. சண்முகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானுர்.

தம்பிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

2-ம் எதிரியும் நடராசாவும் ஒருவரை ஒருவர் தள்ளுப்படுவதைக் கண்டேன். சிவஞானசுந்தரம் பின்னுக்கு வந்தார். எனது வளவிற்குள் 1-ம், 3-ம் எதிரிகள் கத்தியை உயர்த்திக் கொண்டு வந்தார்கள். வளவிற்குள் ஒன்றும் செய்ய வேண்டாமென்று அவர்களுக்கு நடுவில் நின்றுசொன்னேன். அதுவரைக்கும் இறந்தவருக்கு ஒன்றும் நடக்கவில்லை.

1-ம் எதிரி நீளமான கத்தி வைதிருந்தார். 2-ம் எதிரி மரப்பிடியிலான கொடுவாள் கத்திவைத்திருந்தார். சம்பவத்தின் பின்னர் எதிரிகள் பஸ்ஸில் ஏறப்போனுர்கள். கண்டக்டர் 'ஏருதே ஏருதே' என்று தடுத்தார். நடராசா ஓடிப்போய் பஸ்ஸில் ஏறிக்கெண்டார். சிவஞானசுந்தரத்திற்கு சிகிச்சையளிக்கலாம் என நினைத்து அப்போதிக்கரி வீட்டிற்குப் போனேன். 200 யார் போனதும் தபால், ஊழியரை சந்தித்தேன். அவரிடம் அப்போதிக்கரியை கூட்டிவரும்படி சொன்னேன். அப்போதிக்கரி வந்து சிவஞானசுந்தரத்துடன் கதைத்தார். அங்கு நின்றவர்கள் அவரைத் தூக்கி வந்து எனது விறுந்தையில் கிடத்தினுர்கள்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## வழக்குகளில் முதலிட

யாழ்ப்பாணம், செவ்.

வடபகுதியில் சாதிக் கலவர வழக்குகளில் சங்கானை பகுதிதான் முதலிடம் வகிக்கின்றது. பொலிசாரின் புள்ளி விவரங்களிலிருந்து இவ்விபரம் தெரிய வந்துள்ளது.

1967ம் ஆண்டுஅக்டோபர் மாதத்திலிருந்து 1968-ம் ஆண்டு ஏப்ரல் வரையான 6மாத காலத்துள் மட்டும் சங்கானையில் சாதிக் கலவரத்திஞல் 3 கொலைகளும் 8 கொலை முயற்சிகளும், 24 காயப்படுத்திய வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆனல் அடுத்த6மாதகாலத்திற்குள்ளும் இங்கு சாதிக் கலவரம் எதுவுமே நடைபெறுத போதும் களவு வழக்குகள் 50க்கு மேலாக பதியப்பட்டுள்ளதாக பொலிஸ் புள்ளி விபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது (கா நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org